
தரம் 5 – 11 வரை
எண்: 05 எழுத்து: 06 ஜூன் 2011

# AHARAM
# அகரம்



Design: Kinniya Anees

## புத்தாக்கத் திறன்

புத்தாக்கம் என்பதை சிலர் ஒரு புதிய ஆக்கம் மட்டும் என தவறாக அர்த்தம் கொள்கின்றனர். உள்ள ஒன்றை மனிதர்களுக்கு உதவுவதாகவும் சௌகரியமாகவும் உகந்ததாகவும் இழப்பைக் குறைத்து செய்வதுமே புத்தாக்கம். அது சிந்தனையாக, புதிய திட்டமாக, நுட்பமான ஆலோசனையாக, புதிய உருவாக்கமாக, மாற்று யோசனையாக எவ்வாறும் இருக்கலாம். புதிதாக ஒன்றை செய்வது மட்டும் புத்தாக்கமல்ல. புதிய அருமையான ஆலோசனைகள் வழங்குவதும் புத்தாக்க சிந்தனையே.



PUBLIC LIBRARY
JAFFNA

## பாடசாலை நிகழ்ச்சிகளை திட்டமிடுவோம்

## சுற்றுச் சூழலுடன் நட்புக் கொள்வோம்

30/-

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# பிறருக்கு உதவுவோம்

இஸ்லாம் பல நற்பண்புகளையும் நற்குணங்களையும் பற்றி எமக்கு எடுத்துக் கூறியுள்ளது. அவற்றுள் பிறருக்கு உதவி செய்வதும் ஒன்றாகும்.

ஒரு முஸ்லிம் தனது நலன்களை மட்டும் கவனிக்காது பிறரின் நலன்களையும் கவனிக்க வேண்டும். நாம் நமக்காக மட்டும் வாழப் பிறக்கவில்லை. பிறருக்காகவும் வாழப் பிறந்துள்ளோம் என்பதைக் கருத்திற் கொண்டு நம்மைச் சுற்றியுள்ள எமது உறவினரையும் அயலவரையும் கவனிக்க வேண்டும். எமது எல்லாத் தேவைகளையும் எம்மால் தனித்து நின்று நிறைவேற்ற முடியாது. ஆதலால் நாம் பிறரின் உதவியை நாட வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

"ஒருவர் தம் உறவினருக்கு உதவி, உபகாரம் புரிவதும் அவர்களுடன் சேர்ந்து நடப்பதுமே அவர்களுக்கு விரைவில் பயனளிக்கக் கூடியதாகும். அவ்வாறே ஒருவருக்கு மிக விரைவில் வேதனை அளிக்கக்கூடிய தீமையானது, அவர் தனது உறவினருக்கு அநியாயம் இழைப்பதும் அவர்களின் உறவைத் துண்டித்து நடப்பதுமேயாகும்" (இப்னு மாஜா) என்னும் ஹதீஸ் உறவினருடன் அன்பாக இருத்தல், அவர்களுக்கு உதவி செய்தல் என்பவற்றின் முக்கியத்து-வத்தை உணர்த்துகிறது.

"மக்களில் சிறந்தவன் மக்களுக்கு மிகப் பயனுள்ளவனே" (பைஹகி) என்று நபி (ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் குறிப்பிட்டதற்கு ஏற்ப சமூகத்தின் மற்றவர்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கும் அதற்கான வழிவகைகளைச் செய்வதற்கும் நாம் முன்னிற்க வேண்டும். இவ்வாறு இஸ்லாம் கூறியபடி நாம் செயற்படும்போது ஐக்கியமும் பலமும் ஏற்படும். சமூக உறுப்பினர்களிடையே நற்பண்புகள் மேலோங்கி அவர்கள் பிணக்குகளின்றி வாழும் நிலை ஏற்படும். எனவே, நமது உறவினரையும் அயலவரையும் ஆதரித்து, அரவணைத்து நடந்து அல்லாஹ்வின் அன்பையும் அருளையும் பெற்று சீராக வாழ முயற்சிப்போம்.

**கே.ஆர். ரிஸ்லா**

**கமு/ அல்ஹம்றா வித்தியாலயம், மருதமுனை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அகரம்

எண்: 05 ஜூன் 2011 எழுத்து: 06


# உள்ளே...


சுவை தரும் கனிகள் 04





12



14

புத்தாக்கத் திறன் 23



எமது பாடசாலை நிகழ்ச்சிகளைத் திட்டமிடுவோம் 30

சுற்றுச் சூழலுடன் நட்புக் கொள்வோம் 37





உங்கள் எண்ணப்படியே இந்த உலகம் 38



**பிரதம ஆசிரியர்**
ஏ.ரி.எம். நௌபல்

**ஆலோசனைக் குழு**
அஷ்ஷெய்க் ஏ.சீ. அகார் முஹம்மத் (நளீமி)
(பிரதிப் பணிப்பாளர், ஜாமிஆ நளீமிய்யா)

எம்.எச்.எம். ஹஸன் M.ED
(முன்னாள் பிரதம செயற்றிட்ட அதிகாரி, தேசிய கல்வி நிறுவகம்)

ஜெஸீமா ஆதம் லெப்பை B.Sc
(விஞ்ஞானப் பிரிவு, தேசிய கல்வி நிறுவகம்)

**ஆசிரியர்**
எம்.ஏ.எல்.எம். பஸ்லுல் பாரிஸ் (நளீமி)

**உதவி ஆசிரியர்**
ஜே.எம். அஸீம்

**தளக் கோலம்**
ஏ.ஏ. முஹம்மத் பவாஸ்

**சந்தா விபரம்**
1 வருட சந்தா 550/-
6 மாத சந்தா 275/-



**தொடர்புகளுக்கு:**
**அகரம்**
77, தெமடகொட வீதி,
கொழும்பு - 09.
தொ.பே: 011 268 9324, 011 720 6575
பெக்ஸ்: 011 2686030
Email: *aharamipc@gmail.com*



என் கணிதத்தின் தந்தை அல்குவாரிஸ்மி 36

## பாடத்திட்டம்

கணிதம் 26 | விஞ்ஞானம் 33

வரலாறு 17

புலமைப் பரிசில் 40



08



19





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுற்றுலா கற்றுத் தரும் பாடங்கள்

**பாடசாலையின்** கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளில் ஒன்றாக 'கல்விச் சுற்றுலா' நோக்கப்படுகிறது. பாடசாலையின் வருடாந்த செயற்திட்டத்தில் கவனயீர்ப்பைப் பெறுகின்ற இச்சுற்றுலா, மாணவர்களுக்கு உத்வேகத்தையும் புதுத் தெம்பையும் ஏற்படுத்துகின்றது. "மாணவர்களை சிறியதொரு மாற்றத்துக்கூடாக ஆசுவாசப்ப டுத்தல்", "கிணற்றுத் தவளைகள் போல் இல்லாமல் உலகைப் பார்த்து பாடங்கள் படிக்கட்டும்" என்ற வசனங்கள் சுற்றுலாக் காலங்களில் பாடசாலைச் சூழலில் வலம்வரும் வார்த்தைகள். மாணவர்களைப் பொறுத்தவரையில் சுதந்திரக் காற்றை சுவாசிக்கக் கிடைத்த ஒரு வாய்ப்பாகவே இதனைப் பெரிதும் கருதுகின்றனர்.

இங்குதான் எமது சிந்தனையின் பக்கம் மாணவர்களது கவனத்தைக் குவிக்க விரும்புகிறோம். சுற்றுலாக்களில் நாம் கற்றுக்கொள்ள வேண்டியவை அதிகம். அதில் அடிப்படையானது, அல்லாஹ் அற்புதமான படைப்பாற்றல் மிக்கவன் என்பதைக் கற்றுக் கொள்வதாகும். அல்லாஹ்வின் படைப்பில் உள்ள அற்புதத் தையும் நுணுக்கத்தையும் ஒழுங்கையும் அழகையும் வசீகரத்தன்மையையும் அவனது திட்டத்தையும் சுற்றுலா கற்றுத்தர வேண்டும். வானமும் பூமியும் நிலமும் நீரும் புற்பூண்டுகள் முதல் வானளாவ உயர்ந்த தாவரங்கள் வரை, உயிருள்ள ஜீவ இனங்கள் உட்பட அனைத்தும் அல்லாஹ்வின் அதிஅற்புதப் படைப்பாற்றலை உரத்துப் பேசிக் கொண்டிருக்கின்றன. அவையெல்லாம் அவன் மீதான விசுவாசப் பிரமாணத்தை வலுப்பெறச் செய்கின்றன.

"எங்கள் இரட்சகா! படைப்பாற்றல் மிக்க உங்களது இரட்சகனை விசுவாசியுங்கள் (என்று) ஈமானின் பால் அழைக்கும் அழைப்பாளனின் பேரோசை கேட்டோம். நாமும் விசுவாசித்தோம்..." (ஆலு இம்ரான்: 193)

சுற்றுலா ஏற்படுத்த வேண்டிய அடிப்படையான விளைவைத்தான் மேலுள்ள வசனம் தெளிவாக உணர்த்துகிறது. இவ்விளைவுதான் அல்லாஹ்வை நெருங்கச் செய்வதிலும் மறுமை மீதான நம்பிக்கையை வலுவாக ஏற்படுத்துவதிலும் பங்க ளிப்புச் செய்கின்றது.

மனப்பாங்கில் ஏற்பட வேண்டிய அடுத்த மாற்றம் உன்னிப்பாக அடையாளப் படுத்தப்பட வேண்டும். பயணம் என்பது சிரமமானது. அது ஒரு வேதனையும் கூட. பொறுமையும் சகிப்புத் தன்மையும் இதற்கூடாக வளர வேண்டும். நாம் எதிர்பார்த்தவை நிறைவேறாதபோதும் நாம் வெறுக்கின்றவை ஏற்படுகின்ற போதும் இப்பண்பு நலன் முக்கியமானது. புரிந்துணர்வும் விட்டுக் கொடுப்பும் உதவும் கருணை மனமும் சுற்றுலாவில் நாம் பெற வேண்டிய மனிதத்துவ பண்புகள். சக மாணவர்களது தேவையை முற்படுத்தல், அவர்களுக்கு சிரமங்கள், துன்பங்கள் ஏற்படும்போது தானுண்டு தன்பாடுண்டு என்றிராது பிறர் நலனுக்காக உதவி ஒத்தாசைகள் புரிதல் அவசியமானது.

ஏன் தெரியுமா? வாழ்க்கை என்பதும் பயணம். அந்தப் பயணத்துக்கும் இந்தக் கட்டுச்சாதங்கள் அவசியம். அதுவே வாழ்க்கையை வளமாக்கும்; மறுமை வீட்டை சுகமாக்கும். ■


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிப்பினைக்கு ஓர் உண்மைச் சம்பவம்

# குற்றமற்ற இளநெஞ்சின் துணிச்சல்

கலீபா உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களின் ஆட்சிக் காலம். அவர் மிகவும் கண்டிப்பானவர்; நீதி தவறாதவர். தனது ஆட்சியில் குடிமக்கள் எவ்வாறு இருக்கிறார்கள் என்பதில் அதீத அக்கறை கொண்டவர். அவரது பெயரைக் கேட்டால் அன்றைய அறபுக் கோத்திரங்களின் தலைவர்கள்கூட நடுங்கி விடுவார்கள். அதேபோல் உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் மிகவும் இரக்க சுபாவம் கொண்டவர் என்பதும் உண்மையே!

அவர்களது ஆட்சிக் காலத்தில் ஒருநாள் மக்கா நகரத்தின் வீதியில் சிறுவர்கள் சிலர் விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். அப்போது அந்த வழியில் கலீபா உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் வந்து கொண்டிருக்கிறார்கள் என்ற செய்தி அவர்களது காதுகளை எட்டுகிறது.

"கலீபா வருகிறார்... கலீபா வருகிறார்..." என்று சப்தமிட்டபடி ஒரு சிறுவன் ஓடினான். உடனே தெருவில் விளையாடிக் கொண்டிருந்த மற்ற சிறுவர்களும் ஆளுக்கொரு பக்கம் சிதறி ஓடினர்.

விளையாடிக் கொண்டிருந்த எல்லா சிறுவர்களும் ஓடி விட்டார்கள். ஒரே ஒரு சிறுவன் மட்டும் ஓடாமல் தைரியமாக அந்தத் தெருவிலே நின்று கொண்டிருந்தான்.

உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அந்தத் தெருவுக்குள் நுழைந்து விட்டார். அப்படியே அந்தச் சிறுவனை நெருங்கினார். அச்சிறுவனைப் பார்த்துக் கேட்டார்,

"எல்லோரும் ஓடிப் போய் விட்டார்கள். நீ மட்டும் ஏன் ஓடாமல் நிற்கிறாய்?"

அதற்கு அந்தச் சிறுவன் கூறினான்:

"அமீருல் முஃமினீன் அவர்களே! உங்களைக் கண்டு பயந்து ஓடுவதற்கு நான் உங்களுக்கு எந்தத் தவறும் செய்யவில்லையே! நான் வழிவிட்டால் தான் நீங்கள் போக முடியும் எனும் அளவுக்கு இந்தத் தெரு ஒன்றும் குறுகியதாகவும் இல்லையே...! அதுதான் நான் ஓடவில்லை..."

இதனைக் கேட்டு ஆச்சரியமடைந்த உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அச்சிறுவனது முதுகைத் தட்டிப் பாராட்டினார்கள்.

அந்தச் சிறுவன்தான் பிற்காலத்தில் மாபெரும் வீரராக விளங்கிய அப்துல்லாஹ் பின் ஸுபைர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் ஆவார். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லலமுல்ல ஆலிப் அலி (இஸ்லாஹிய்யா வளாகம்)
www.aliaalif.tk



# சுவைமிகு கனிகள்

வித்திலிருந்து மரம் வந்ததா? அல்லது மரத்திலிருந்து வித்து வந்ததா? என்று பலரும் சுவாரஷ்யமாகக் கேட்பதை நீங்கள் செவியுற்றிருப்பீர்கள். உண்மையில் வித்து விருட்சமாகி, விருட்சத்தில் பூ பூத்து, பூ காயாகி, காய் பழமாகி, பழத்திலிருந்து வித்துருவாகி, அவ்வித்து மீண்டும் விருட்சமாகி... இத்தொடர் கதைக்கு முடிவே இல்லை. இக்கதை அல்லாஹ் இப்பூவுலகைப் படைத்தது முதல் தொடர்ந்து கொண்டேதான் இருக்கின்றது.

நாம் அன்றாடம் பலவிதமான சுவைகளிலும் வித்தியாசமான வடிவங்களிலும் அழகுமிகு நிறங்களிலும் பல்வேறு பழங்களைக் காண்கிறோம். அவற்றைச் சுவைக்கவும் செய்கிறோம். மனிதன் உட்பட அனேகமான உயிரினங்கள் பழங்களை உண்பதில் அலாதியான விருப்பம் காட்டுகின்றன. இதற்கு அவற்றில் காணப்படும் கவர்ச்சியும் சுவையுமே காரணமாகும். குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரினதும் உடலாரோக்கியத்தில் பழங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. பழங்களில் இரும்புச் சத்துடன் பொஸ்பரஸ், கல்சியம் என்பனவும் இன்னும் ஏராளமான ஊட்டச் சத்துக்களும் விட்டமின்களும் அடங்கியுள்ளன.

பழங்களில் மனிதனுக்கு அதிக விருப்பமுள்ளதனால்தான் சுவனத்திலும் பல்வேறு பழவர்க்கங்களை எமக்குத் தர அல்லாஹ் ஏற்பாடு செய்திருப்பதாகக் கூறி மனிதர்களின் ஆர்வத்தைத் தூண்டுகிறான் போலும். அல்லாஹ் கூறுகிறான்:

"அதில் அவர்களுக்கு விதவிதமான கனிவர்க்கங்களுண்டு. அவற்றிலிருந்து நீங்கள் உண்பீர்கள்."
(43 :73, 36 :57, 55: 11)

சிலபோது நாம் பழங்களை சுவைக்காகவோ அல்லது பொழுதுபோக்குக்காகவோ உட்கொண்டாலும் அவற்றிலிருந்து நாம் பெற்றுக் கொள்கின்ற போசணைகள் மிகப் பெறுமதியானவை. அந்தவகையில்தான் அல்லாஹ் ஒவ்வொரு பழத்திலும் ஒவ்வொரு விதமான போசணைப் பதார்த்தங்களை வைத்துள்ளான். அவற்றை நாம் தொடர்ந்தும் பெற்றுக் கொள்ளும் விதத்தில் ஒவ்வொரு பழத்திற்கும் ஒரு காலவரையறையையும் வைத்துள்ளான். எனவே வருடம் முழுதும் ஏதோவொரு வகையில் ஏதாவதொரு பழத்தை எம்மால் பெற்றுக் கொள்ள முடிகிறது.

காய்களின் முதிர்ச்சியே கனியாகும். இவை கனியாகும் காலத்தில் காயினுள் பல இரசாயன மாற்றங்கள் உண்டாகி அவை சுவைமிக்கனவாக மாறுகின்றன. இனிப்புப் பதார்த்தங்கள் அதிகமாக உள்ள பழங்கள் சுவைமிக்கனவாகவும் அமிலம் அதிகமாக உள்ள பழங்கள் புளிப்பானவையாகவும் காணப்படுகின்றன. தோடம்பழத்தில் அமிலமும் இனிப்புப் பாதார்த்தமும் சமமாக உள்ளன. இதனால்தான் நாம் அதனைப் புளிப்பானதாகவும் இனிப்பானதாகவும் உணர்கிறோம். அனைத்துப் பழங்களும் தமது காய்ப் பருவத்தில் புளிப்பானவையாகவே இருக்கின்றன. காரணம் அவை தம்முள் அதிகமான அமிலத்தைக் கொண்டிருப்பதாகும்.

நீங்கள் ஒரே வகையான இரு பழங்களில் வித்தியாசமான சுவையினை உணர்ந்திருப்பீர்கள். உதாரணமாக ஒரே இனத்தைச் சேர்ந்த இரண்டு மாம்பழங்கள் ஒரே சுவையைக் கொண்டவை அல்ல. அவற்றின் சுவையில் சிறியதொரு மாற்றமேனும் இருக்கும். ஏனெனில், அவற்றுக்குக் கிடைக்கும் சில சூழற் காரணிகளால் அவை சுவையில் வித்தியாசப்படுகின்றன. உதாரணமாக மண்ணின் வகை, காலநிலை, நீர், உரம் என்பன போன்ற சில துணைக் காரணிகளைக் குறிப்பிடலாம். இக்காரணிகளில் கூட்டல், குறைவு நிகழும்போது பழத்தில் காணப்படுகின்ற கூட்டுப் பொருட்களிலும் சில மாற்றங்கள் நிகழ்கின்றன. சர்க்கரை, ஒருவகை அமிலம், விட்டமின், மாப்பொருள், புரோட்டீன் மற்றும் செலுலோஸ் போன்ற கூட்டுப் பொருட்கள் அனைத்தும் ஒன்றாகக் கலக்கப்பட்டு கனிகளில் வித்தியாசமான அளவுகளில் கூட்டுப் பொருட்கள் சேரும்போது இச் சுவை மாற்றத்தை உணரலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனை அல்லாஹ் அல்குர்ஆனிலே இவ்வாறு கூறுகின்றான்:

"பூமியில் அடுத்தடுத்து பல பகுதிகள் காணப்படு கின்றன. (தாவரங்களுக்கு) ஒரே வித நீர் புகட்டப்படு கிறது. (அவ்வாறிருக்க) சிலவற்றை, சிலவற்றைவிடச் சுவையில் நாம் மேன்மையாக்கியும் வைத்திருக்கி றோம்." (13: 4)

இதுபோன்ற அமைப்பு சுவனத்திலும் உள்ளதாக அல்லாஹ் கூறுகின்றான். எனினும், அது துணைக் காரணிகளில் நிகழும் கூடுதல் குறைவினால் ஏற்ப டும் சுவை மாற்றமல்ல. இயல்பிலேயே வித்தியாச மான சுவைகளை வழங்கக்கூடிய விதத்தில் அல்லாஹ் சுவனத்தில் அப்பழங்களை அமைத் துள்ளான்.

"ஈமான் கொண்டு நல்லமல்கள் செய்தோருக்கு சுவனங்கள் உண்டு. அவற்றுக்குக் கீழ் ஆறுகள் ஓடிக் கொண்டிருக்கும். அங்கு அவர்களுக்கு ஒரு கனி உணவாக வழங்கப்படும் போதெல்லாம் முன்பும் இதைத்தான் நாம் கொடுக்கப்பட்டோம் என்று கூறுவார்கள். அவை பார்வைக்கு ஒரே விதமாகத் தோன்றினாலும் (ருசியில் மாறுபட்டவையாகும்.)" (2: 25)

பழங்களில் போசணைப் பதார்த்தங்கள் காணப்படுவது போலவே அவை பல்வேறு நோய்களுக்கான நிவாரணியாகவும் திகழ்கின்றன. உதாரணமாக இங்கு சிலதை அவதானிப்போம்.

மாதுளம்பழத்தை சமிபாட்டுக் கோளாறுக ளின்போது மருந்தாகப் பயன்படுத்துவர். இதன் பழச்சாறு இதயம், குடல், சிறுநீரகம் என்பன சீராக இயங்கத் துணை புரிகின்றது. அத்தோடு இப்பழத்தில் குளுக்கோஸ் சக்தி அதிகம் இருப்ப தால் உடல் சோர்வை உடனடியாகப் போக்க முடியும்.

தக்காளிப்பழத்தில் மனிதனுக்குத் தேவையான A,C விட்டமின்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. இவை புற்றுநோய்களுக்கும் நிவாரணியாகத் திகழ்கின்றன.

அப்பிள் பழம் இதயத்திற்கு உற்சாகத்தையும் புத்துணர்வையும் தருகின்றது. அத்தோடு அப்பிள் சாறு குழந்தைகளின் வயிற்றுப் போக்கைக் குணமாக்குகிறது.

ஆரஞ்சுப் பழம் உடலுக்குப் புத்துணர்ச்சி யையும் வலுவையும் தருகின்றது. கர்ப்பிணிகள் மற்றும் குழந்தைகளுக்கு இது மிகவும் நல்லது.

திராட்சைப் பழச்சாறு நீரிழிவு நோயைக் குணப்படுத்துகின்றது. சிறுநீர்த் தாரைகளில் உண்டாகும் கல்லைக் கரைக்கிறது.

அன்னாசிப் பழம் இதயநோய்க்கு மிகவும் ஏற்றமானது. புகை பிடிக்கும் பழக்கத்தை நிறுத்து வதற்கு அன்னாசிப் பழம் பயன்படுகிறது.

பப்பாளிப் பழம் அஜீரணத்தைக் குணமாக்க சிறந்த மருந்தாகும். அத்தோடு தேன் கலந்து உண் டால் நரம்புத் தளர்ச்சி நீங்கும். தாய்ப்பாலும் அதி கம் சுரக்கும்.

வாழைப்பழம் அஜீரணத்தைப் போக்குவதோடு உடலில் தங்கும் தேவையற்ற பொருட்களை வெளியேற்றி விடுகிறது.

நெல்லிக்கனி இதயநோய்க்கு மிகவும் சிறந்தது. ஒரு நெல்லிக்கனியில் 4 அப்பிள்களுக்கு இணை யான சத்துக்கள் இருப்பதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

இன்று வியாபார நோக்கில் துரிதமாகக் காய்களை கனியச் செய்வதற்கும் பல நாட்கள் பழுதடையாதிருப்பதற்காகவும் இப்போசாக்குகள் நிறைந்த பழங்களின் மீது இரசாயனப் பதார்த்தங் கள் தெளிக்கப்படுகின்றன. இதனால் அவற்றில் உள்ள போசணைக் கூறுகள் அழிக்கப்பட்டு தோற் றத்தில் மிக அழகானவையாகக் காட்சியளிக்கும். இதனால் சிலபோது உடல் உபாதைகளே ஏற்படுகின்றன.

எனவே, பழங்களை அதிகம் உண்பதனூடாக எமது உடலாரோக்கியத்தைப் பேண முடியும். கற்கும் பருவத்தில் அதிகம் பழங்கள் உண்பது சிறந்த ஞாபக சக்தியையும் தருகின்றது. பல்வேறு போசாக்குகளையும் நோய் எதிர்ப்புச் சக்திகளை யும் கொண்டுள்ள இப்பழங்களை எமக்கு உண வாகத் தந்தவன் வல்லவன் அல்லாஹ்வே!

"அவனே உங்களுக்காக வானத்திலிருந்து மழையைப் பொழிவித்து அதனைக் கொண்டு கனி வகைகளிலிருந்து உணவை வெளிப்படுத்தினான்." (2: 22)

வல்லவன் அல்லாஹ் அல்குர்ஆனிலே பழங்க ளைப் பற்றிக் கூறிவிட்டு, மனிதன் அதனை வெறு மனே சுவைத்து மகிழ்வதுடன் மாத்திரம் நிறுத்திக் கொள்ளாது அதனைப் பற்றி சிந்தித்து ஆராய்ந்து நன்றியுள்ள அடியானாக இருக்க வேண்டுமென அல்குர்ஆன் பணிக்கிறது.

"இதில் சிந்தித்து அறியும் மக்களுக்கு நிச்சயமாகப் பல அத்தாட்சிகள் இருக்கின்றன." (13: 4)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழும் அற்புதம் அல்குர்ஆன்



இத்ரீஸ் தௌஃபீக்

# அல்குர்ஆனைக் கற்பித்து

# கண்ணீர் வடித்த கிறிஸ்தவப் பாதிரி

இளம் பருவத்தினர் மிகுந்த பிரச்சினைகளைக் கொண்டவர்கள். ஆனால், எனது மாணவர்கள் ஒரு முஸ்லிம் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்கு சிறந்த உதாரணமாக இருந்தார்கள். அவர்கள் தூய்மையானவர்களாகவும் இரக்கமுள்ளவர்களாகவும் இருந்தார்கள். எனக்கும் அவர்களுக்கும் இடையில் ஒரு நட்புணர்வு வளர்ந்திருந்தது. அவர்கள் ரமழான் காலத்தில் தொழுவதற்காக எனது வகுப்பறையைக் கேட்டார்கள். அதிஷ்டவசமாக எனது வகுப்பறை மட்டுமே கார்பட் விரிப்பிடப்பட்டதாக இருந்தது. எனவே, அவர்கள் ஒரு மாத காலமாக தொழும்போது நான் வழக்கமாக அவர்களுக்குப் பின்னால் இருந்து அவர்களை அவதானித்து வந்தேன். நான் ஒரு முஸ்லிமாக இல்லாதபோதும் அவர்களோடு சேர்ந்து நோன்பு நோற்றேன்.

ஒரு தடவை வகுப்பில் நான் அல்குர்ஆனைப் பற்றிக் கற்பிக்கும்போது இந்த வசனத்தை ஓதினேன்.

"அவர்கள் தூதருக்கு இறக்கப்பட்டவற்றைச் செவிமடுக்கும் போது அவர்களது கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடும். அவர்கள் சத்தியத்தை அறிந்து கொண்டார்கள்."
(அல்மாஇதா: 83)

எனது கண்களிலிருந்தும் கண்ணீர் வடிந்தது. நான் அதனை மாணவர்களுக்குத் தெரியாமல் மறைத்துக் கொள்வதற்கு முயற்சித்தேன்.

எனது வாழ்க்கையின் இன்னுமொரு முக்கியமான நிகழ்வுதான் 2001 செப்டம்பர் 11 தாக்குதலாகும். அதற்கு அடுத்த தினம் நிலத்தின் கீழுள்ள ஓர் அறையில் நான் இருந்தேன். எனக்கு மிகவும் பயமாக இருந்தது. அமெரிக்காவில் போன்று இங்கிலாந்திலும் தாக்குதல் நடக்குமோ என்ற பயம் எனக்கிருந்தது. அதேநேரம் மேற்கத்தியர்கள் இந்த மார்க்கத்தினால் மிகவும் பயந்திருந்தனர். முஸ்லிம்கள் பயங்கரவாதத்தைத் தோற்றுவிப்பதற்காக உருவாகியுள்ளனர் என்று அவர்கள் நினைத்தனர்.

எவ்வாறிருந்தபோதிலும் முஸ்லிம்களுடனான எனது முன்னைய அனுபவங்கள் என்னை வேறொரு வித்தியாசமான கோணத்தில் சிந்திப்பதற்கு இட்டுச் சென்றது. இஸ்லாம் ஏன்? நாம் ஏன் முஸ்லிம்களை பயங்கரவாதிகளாகக் காண்கிறோம்? அவர்களுக்கு நடப்பதைப் போன்று கிறிஸ்தவர்களுக்கும் நடந்தால் கிறிஸ்தவர்களும் அதே வழியில் செல்வார்களா?

ஒரு நாள், நான் லண்டனிலுள்ள மிகப் பெரிய பள்ளிவாசலுக்கு இஸ்லாத்தைப் பற்றித் தெரிந்து கொள்வதற்காகச் சென்றேன். நான் லண்டன் மத்திய பள்ளிவாசலுக்குச் சென்றபோது அங்கு யூசுஃப் இஸ்லாம் (உலகின் மிகப் பிரபலமான பொப் பாடகராக இருந்து இஸ்லாத்திற்கு மாறியவர்) இருந்தார். அவரைச் சுற்றி வட்டமாக சிலர் அமர்ந்திருந்தார்கள். அவர் அவர்களுக்கு இஸ்லாத்தைப் பற்றிக் கற்பித்துக் கொண்டிருந்தார்.

"நீங்கள் ஒரு முஸ்லிமாக இருப்பதற்கு என்ன செய்கின்றீர்கள்?" என்று நான் அவரிடம் கேட்டேன்.

அதற்கவர் கூறினார்:

"ஒரு முஸ்லிம் இறைவன் ஒருவன் என்பதை நம்ப வேண்டும். ஒரு நாளில் ஐந்து வேளைகள் தொழ வேண்டும். ரமழானில் நோன்பு நோற்க வேண்டும்..."

நான் அவர் பேசும்போது குறுக்கிட்டு, "இவை அனைத்தையும் நான் ஏற்றுக் கொண்டுள்ளேன். ரமழானில் நோன்பும் பிடித்தேன்" என்றேன்.

அவர் என்னிடம், "அப்படியானால் எதற்காக நீங்கள் காத்துக் கொண்டிருக்கின்றீர்கள்? ஏன் பின் வாங்குகின்றீர்கள்?" என்றார்.

"இல்லை. எனக்கு இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளும் உத்தேசமில்லை" என்று நான் கூறினேன்.

அப்போது தொழுகைக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. அனைவரும் எழுந்து சென்று தொழுவதற்காக வரிசையில் நின்றார்கள். நான் பின்னால் அமர்ந்திருந்தேன். நான் அழுதேன். தொடர்ந்தும் அழுது கொண்டிருந்தேன். நான் ஏன் முட்டாளாக முயற்சித்துக் கொண்டிருக்கின்றேன் என என்னிடமே நான் கேட்டுக் கொண்டேன்.

(35ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹதீஸ் பூங்காவிலிருந்து



الحديث الشريف

ஏ.ஆர்.எம். ஸஜீத் (இஸ்லாஹி)

عَنْ شَدَّاد بْنِ أَوْسٍ عَنِ النَّبِيِّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ: مَنْ دَانَ نَفْسَهُ وَعَمِلَ لِمَا بَعْدَ المَوْتِ وَالعَاجِزِ مَنْ أَتْبَعَ هَوَاهَا وَتَمَنَّى عَلَى اللهِ (التِّرْمِذِيْ)

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியதாக ஷத்தாத் இப்னு அவ்ஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள்: "தன்னை சுய விசாரணை செய்து கொண்டும் மரணத்தின் பின்னுள்ள வாழ்விற்காக நல்லமல்கள் செய்து கொண்டும் வாழ்பவன்தான் உண்மையான அறிவாளியாவான். மனோ இச்சைகளுக்குக் கட்டுப்பட்டு அல்லாஹ்விடம் வீணான எதிர்பார்ப்பை வைத்துக் கொண்டிருப்பவனே அறிவீனன் ஆவான்." (அத்திர்மிதி)

மரணத்தின் பின்னுள்ள வாழ்க்கையில் நாம் ஈடேற்றம் பெற்றவர்களாகவும் அல்லாஹ்வின் அன்பிற்கும் அருளுக்கும் உரித்தானவர்களாகவும் இருக்க இஸ்லாம் எமக்கு பல்வேறு வழிகாட்டல்களையும் போதனைகளையும் வழங்குகிறது.

மரணத்தின் பின்னால் உள்ள வாழ்க்கையை ஈமான் கொண்டு வாழும் நாம், அந்த வாழ்க்கையின் வெற்றிக்காக இந்த உலகில் எவ்வாறு செயற்படுவது என்பதை அறிந்துகொள்ள வேண்டியது அவசியமாகும். அவ்வெற்றிக்காக அவாவுறும் நாம் அல்லாஹ்வின் கட்டளைகளை நிறைவேற்றுகின்ற நேரான வழியைத் தேர்ந்தெடுக்க வேண்டும், மாறாக மனோ இச்சையையோ அல்லது ஷைத்தானின் பாதையையோ தெரிவு செய்யாமல் இருக்க அல்லாஹ்விடம் பாதுகாப்புக் கோர வேண்டும்.

உலகத்தின் இயல்பு மனிதனை மரணத்தின் பின்னுள்ள வாழ்க்கைக்குத் தயாராகவிடாமல் அவனது கவனத்தை உலகக் கவர்ச்சிகளின்பால் திருப்பிவிடக் கூடியதாகக் காணப்படுகிறது. மனிதனும் அதன் பின்னால் வேகமாகக் கவரப்பட்டு செல்லும் இயல்புள்ளவனாகக் காணப்படுகிறான்.

மரணத்திற்குப் பின்னால் உள்ள வாழ்க்கைக்காக இவ்வுலகில் நல்லமல்களை அதிகம் செய்து வாழ்பவன்தான் உண்மையான அறிவாளி என்பதை நபியவர்கள் மேற்கூறிய ஹதீஸில் எடுத்துரைத்துள்ளார்கள். நபியவர்களும் அவர்களது தோழர்களும் அற்ப உலக இன்பங்களுக்கு உள்ளத்தில் இடம்கொடுக்காமலேயே வாழ்ந்தார்கள்.

ஒரு தடவை நபியவர்கள் ஒரு மரத்தின் நிழலில் தூங்கி எழும்பினார்கள். அப்போது அவர்களுடைய விலாப் புறத்தில் அவர்கள் துயில் கொண்டு எழுந்த ஈச்சம் பாயின் அடையாளம் பதிந்திருந்தது. இதனைக் கண்ட ஸஹாபாக்கள் "நாங்கள் உங்களுக்கு ஒரு அழகிய விரிப்பினைப் பெற்றுத் தந்தால் அது சிறந்ததாக இருக்குமே!" எனக் கேட்டபோது நபியவர்கள் கூறினார்கள்:

"எனது இந்த உலக வாழ்க்கை ஒரு பிரயாணியின் வாழ்க்கையைப் போன்றது. அவன் நீண்டதொரு பிரயாணம் செய்து தனக்கு ஏற்பட்ட களைப்பை போக்கிக் கொள்வதற்காக ஒரு மரத்தின் நிழலில் அமர்ந்து களைப்பாறியதும் மீண்டும் பிரயாணத்தைத் தொடர்கிறான். அந்தப் பிரயாணியின் மரநிழல் வாழ்க்கைதான் எனது இந்த உலக வாழ்க்கை."

ஸஹாபாக்களும் இம்மையின் இன்பங்களை துச்சமாக நினைத்து மறுமைக்காகவே முழுக்க முழுக்க வாழ்ந்தார்கள். இவர்களைப் பற்றி அல்குர்ஆன் இவ்வாறு வர்ணிக்கிறது:

"சில மனிதர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய வர்த்தகமோ, கொடுக்கல் வாங்கலோ அவர்களை அல்லாஹ்வை நினைவு செய்வதிலிருந்தும் தொழுகையை நிறைவேற்றுவதிலிருந்தும் ஸகாத் கொடுப்பதிலிருந்தும் அவர்களை திசை திருப்பி விடாது. அவர்கள் உள்ளாங்களும் பார்வைகளும் தட்டுத் தடுமாறும் அந்நாளை எண்ணி அவர்கள் பயந்து கொண்டிருப்பார்கள்." (அந்நூர்: 37)

இத்தகைய அல்குர்ஆன் வசனங்களும் நபிகளாரின் பொன்மொழிகளும் நாம் இவ்வுலகில் மதிமயங்கிவிடாது உலகில் வாழ வேண்டும் என்பதையும் மரணத்தின் பின்னால் உள்ள வாழ்க்கைக்காக வாழ வேண்டும் என்பதையும் இதற்காக எம்மை நாமே சுயவிசாரணை செய்து கொள்ள வேண்டும் என்பதையும் எடுத்துக் காட்டுகின்றன.

(35ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சுவனத்திற்காய்

**அல்லாஹ்வின்** மார்க்கத்திற்காக எத்தனையோ சொந்தங்கள் தம் உயிரையும் உடைமைகளையும் தியாகம் செய்தார்கள். அல்லாஹ் அவர்களுக்கு சுவனத்தை வாக்களித்திருப்பதை அல்குர்ஆனில் காணலாம். அந்த சுவனத்தின் சொந்தமாய் வாழ்ந்த அனஸ் இப்னு நழ்ர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களின் வாழ்க்கைப் புத்தகத்திலிருந்து ஒரு பக்கத்தைப் புரட்டுவோம்.

அனஸ் இப்னு நழ்ர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அவரது ஆரம்ப காலத்திலிருந்தே இஸ்லாத்திற்காக மிகவும் கஷ்டப்பட்டவர்களில் ஒருவர். இவர், பத்ர் போரில் தனக்கு கலந்து கொள்ளக் கிடைக்காததால் அதிகம் கவலைப்பட்டார். "அடுத்த யுத்தம் வரும்போது என்னை மறக்க வேண்டாம்" என நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களிடம் அடிக்கடி நினைவூட்டி வந்தார்கள்.

ஆம், அவரின் ஆசைபோல் உஹதுப் போரிற்கான அழைப்பு வருகிறது. அதில் கலந்து கொண்டு கடுமையாகப் போராடினார்கள். உடலில் எழுபதுக்கும் மேற்பட்ட காயங்களுடன் ஷஹீதாக்கப் பட்டிருந்தார்கள். பாரிய இரத்தக் காயங்களால் உடல் நிரம்பியிருந்தது. யாருமே அடையாளம் காணாத இந்த ஆன்மாவை ஒரு பெண் வந்து அடையாளம் கண்டு கொண்டார். அதுவும் ஷஹீதின் உடலிலிருந்த ஒரே ஒரு மச்சத்தின் மூலமாக... ஆம், அவர்தான் அனஸ் இப்னு நழ்ர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களின் சகோதரி யாவார்.

சுப்ஹானல்லாஹ், இன்று நாம் எம் சகோதரர்களை அல்லது தந்தையை இந்நிலையில் காண்போமா? காண விரும்புவோமா? அப்படியான ஒரு நிலைக்கு எம் உள்ளத்தை நாம் மாற்ற வேண்டும்.

யா அல்லாஹ்! அந்நிலையில் எம் உள்ளத்தை நீயே உறுதியாக்க வேண்டும். அவர்களுக்கும் எமக்கும் இந்த ஈமானிய உணர்வை தந்தருள வேண்டும். அந்த சுவனத்துப் பூஞ்சோலையில் நான் என் குடும்பத்துடன் உலாவர வேண்டும். அதற்கு நீயே அருள்புரிய வேண்டும் ரஹ்மானே..!

**ஏ.எஸ்.எப். றிப்னா,**
**முன்னேகுளம், நிகவரெட்டிய**

# ஞானமும் நேர்வழியும்

- எந்தத் திட்டமும் இல்லாமல் நீ ஒரு வேலையைச் செய்யாதே! சிந்திக்காமல் எதையும் பேசாதே!
- யார் அல்லாஹ்வுக்கு அடிபணிகிறாரோ அவரை அல்லாஹ் உயர்த்துகின்றான்; யார் பெருமிதம் கொள்கிறாரோ அவரைத் தாழ்த்துகிறான்.
- ஒருவரது அறிவு அதிகரிக்க அதிகரிக்க அவருடைய பேச்சு குறைந்து விடும்.
- சுவையான வார்த்தைகளை யார் பேசுகிறாரோ அவருக்கு நண்பர்கள் அதிகம்.
- அதிகம் சிரிக்காதே! உனது உள்ளம் இறந்து விடும்.
- நீ யாராவது ஒருவரைக் கண்டால் உன்னை அறிமுகம் செய்து வை. அன்பின் அடிப்படையாக இருப்பது அறிமுகம் ஆகும்.
- மௌனமாக இருப்பதென்பது ஓர் அறிவு ஞானமாகும். ஆனால் அதைச் செய்பவர்களோ அரிது.
- உனக்கு ஏற்படும் சோதனைகளில் பொறுமையாக இரு. அருட்கொடைகள் கிடைக்கும் நேரத்தில் நன்றி செலுத்து.

**எம்.என்.எம். சக்கீ**
**தரம்-10, தி/புனித சூசையப்பர் கல்லூரி,**
**திருகோணமலை.**

# பயனுள்ள கூற்றுக்களும் கூறியவர்களும்

உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்!
**கார்ல் மாக்ஸ்**

செய் அல்லது செத்து மடி
**மகாத்மா காந்தி**

மக்கள் ஆட்சி என்பது மக்களால் மக்களுக்கு நடத்தப்படும் ஆட்சி
**ஆப்ரஹாம் லிங்கன்**

துப்பாக்கி குண்டைவிடவும் சக்தி வாய்ந்தது வாக்குச் சீட்டு
**ஆப்ரஹாம் லிங்கன்**

உழைப்பவரின் வியர்வை உழைக்காதவரின் கஸ்தூரியை விட மணமானது
**ஆயிலுல் கர்னி**

அறிந்தவன் மக்களின் அச்சத்தினால் வாய்மூடிவிட்டால் அல்லது அறிவிலி அவனது மடைமையில் தொடர்ந்திருந்தால், சத்தியம் எப்போது தெளிவாகும்?
**இமாம் அஹ்மத்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாருக்கு இழப்பு?



*எப்பொழுதாவது* முல்லா படகோட்டுவது உண்டு. ஒரு முறை அவருடைய படகில் இலக்கண இலக்கியங்களைக் கற்றுத் தேர்ந்த பெரும் புலவர் ஒருவர் பயணம் செய்தார். படகு மறு கரையை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்தது. அப்பொழுது அந்தப் பெரும் புலவர், "உமக்கு இலக்கணப் புலமை உண்டா?" என்று முல்லாவைக் கேட்டார்.

"இல்லை" என்றார் முல்லா.

"அப்படியானால் உம் வாழ்வின் பாதியை நீர் வீணாக இழந்து விட்டீர்" என்று செருக்கோடு கூறினார் பெரும் புலவர். முல்லா பதிலேதும் பேசவில்லை.

படகு ஆற்றின் நடுவே போய்க் கொண்டிருந்தது. அப்பொழுது படகில் ஓர் ஓட்டை ஏற்பட்டு தண்ணீர் படகுக்குள் வேகமாக நுழைந்தது. பெரும் புலவரை நோக்கி "உங்களுக்கு நீந்தத் தெரியுமா?" என்று முல்லா கேட்டார். "எனக்குத் தெரியாதே" என்றார் புலவர்.

"அப்படியானால் உங்களின் வாழ்வு முழுவதையும் இழந்து விட்டீர்கள். இப்பொழுது படகு ஆற்றில் குதித்து நீந்தித் தாம் மட்டும் கரை சேர்ந்தார். பாவம் செருக்குடைய பெரும் புலவர் ஆற்றில் மூழ்கி இறந்து போனார்."

**எப். இல்மா சஹறுதுல்லா, தரம் 8,**
**ஸாஹிரா மு.வி, எல்லலமுல்ல**

# பக்ரீரியா தகவல்



பக்ரீரியாக்களில் ஒரு நிமிடத்திற்கு 18-20 தடவைகளில் பிளவு நடைபெறும். கொலரா நோய்க்குரிய பக்ரீரியாக்கள் இந்த வீதத்தில் பிளவடையுமாயின் 24 மணித்தியாலயக் காலப் பகுதியில் 47 000 000 000 000 000 000 000 ($4.7 \times 10^{22}$) வரையான எண்ணிக்கையான பக்ரீரியாக்கள் குடித்தொகையை உருவாக்கும். இவற்றின் திணிவு 2000 தொன்களாகும். ஆனால் உண்மையில் உணவுப் பற்றாக்குறை, அனுசேபக் கழிவுகளின் நச்சுத்தன்மை ஆகியன காரணமாக இவ் எண்ணிக்கையில் அவை பெருகுவதில்லை.

**ஏ.ஏ. அஸ்பா பானு, 2ம் வருடம்,**
**பாத்திமா ஸஹ்ரா மு.அ.க, ஓட்டமாவடி**

# பொன்மொழிகள் சில


* தமக்குக் கீழே இருப்பவர்களுக்கு உதவுவதில் யார் சுறுசுறுப்பாக இருக்கின்றாரோ அவருக்குத் தம்மை விட மேலே இருப்பவரைக் கண்டு பொறாமைப்பட நேரம் இருக்காது.
* தவறுகளை மறந்து விடுங்கள். ஆனால், அந்தத் தவறுகள் உங்களுக்குக் கற்றுக் கொடுத்தவற்றை மறந்து விடாதீர்கள்.
* ஒருவருடைய விருப்பங்களை நீங்கள் புறக்கணித்தால் அவருடைய ஆற்றல்களையும் புறக்கணித்தவர் ஆவீர்கள்.
* உங்களைக் கையாள்வதற்கு மூளையைப் பயன்படுத்துங்கள்; மற்றவர்களைக் கையாளும் போது இதயத்தைப் பயன்படுத்துங்கள்.
* எது உங்களிடம் இல்லையோ அதை அடுத்தவருக்கு நீங்கள் கொடுக்க முடியாது.
* கடுமையாக முயன்று அடையப்படும் வெற்றியில் இருக்கிறது முழுமையான மகிழ்ச்சி.
* அதிகம் பேசுகிறவர் குறைவாகக் கேட்கிறார்; குறைவாகப் பேசுபவர் அதிகம் கேட்கிறார்.
* நல்லவனுக்கு நல்லவனாக இரு; கெட்டவனுக்கும் நல்லவனாக இரு.
* தவறை ஒப்புக் கொண்டவர்கள் மதிக்கப்படுவார்கள்.
* அறிவில் தலையாயது தன்னை அறிவதே; இவற்றை அறியாதிருப்பவன் மாட மாளிகையில் வாழ்ந்தாலும் அவனது உள்ளம் அமைதி பெறாது.
* வரலாற்றைப் படித்து உணர்ச்சி வசப்படுவது மட்டும் போதாது. அதன் படிப்பினைகளை அடையாளம் கண்டு எமது வாழ்வைத் திட்டமிட வேண்டும்.
* தீர விசாரணை செய்யாது எந்தச் செய்தியையும் ஏற்காதீர்கள். மற்றவருக்கு அதனை சொல்வதற்கு முன் உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். இல்லையெனில் பொய்யராகவே நீங்கள் கருதப்படுவீர்கள்.
* உன் உடல் விலை மதிப்பற்ற பெறுமதியைக் கொண்டது. உனது அற்ப ஆசைகளுக்கு அடிமையாக்கி அதை அழித்து விடாதே.

**பாத்திமா அஸ்கா யூஸுப், தரம்-11,**
**நிக/அபுக்காகம மு.ம.வி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகம்



| | |
|---|---|
| உலகில் மிகப் பெரிய விலங்கு - | திமிங்கிலம் |
| உலகில் உயரமான விலங்கு - | ஒட்டகச் சிவிங்கி |
| உலகில் மிக உயரமான மலை - | இமயமலை |
| உலகிலேயே மிக நீளமான நதி - | அமேசன் (6,750 கிலோ மீற்றர்) |
| உலகிலேயே மிக ஆழமான ஆழி - | மரியானா ஆழி (11,522 மீற்றர்) |
| உலகிலேயே மிகப் பெரிய தீவு - | கிறீன்லாந்து (2,175,597 சதுர கிலோ மீற்றர்) |
| உலகிலேயே மிகப் பெரிய நாடு - | கனடா (சோவியத் ரஷ்யா சிதறிய பிறகு) |
| உலகில் அதிக மழை பெறும் இடம் - | சீறாப்புஞ்சி (இந்தியா) |
| உலகில் உயர்ந்த சிகரம் - | எவரெஸ்ட் (நேபாளம்-திபெத்-8848 மீற்றர்) |
| உலகிலேயே மிகவும் பரந்த கடல் - | தென் சீனக்கடல் (2,974,600 சதுர கி.மீ) |
| உலகில் பெரிய ஏரி - | கஸ்பியன் (ரஷ்யா-ஈரான்) |
| உலகில் உயரமான நீர்வீழ்ச்சி - | ஏஞ்சல்ஸ் (வெனிசுலா-979 மீற்றர்) |
| உலகில் மிகத் தாழ்ந்த பகுதி - | சாக்கடல் (கடல் மட்டத்திலும் 300 மீற்றர் குறைவு) |

*எம்.ஐ.எப். சல்மா, தரம்-6, குளி/பண்டாரகொஸ்வத்த மு.ம.வி*

# விலங்குகள் தொடர்பான விந்தைமிகு விடயங்கள்



| | |
|---|---|
| 1. கடல் விவசாயம் என சிறப்பித்துக் கூறப்படும் தொழில் - | இறால் வளர்ப்பு |
| 2. பிறந்த அன்றே இறக்கும் பூச்சி - | ஈசல் |
| 3. அதிக நீர் அருந்தும் பறவை - | புறா |
| 4. கடலாமைகளுள் மிகப் பெரியது - | லெதர் பேக் டோட்டில் (900 kg) |
| 5. உலகில் மிக உயரமான பறவை - | தீக்கோழி |
| 6. கண்கள் மூலம் சப்தத்தை கேட்கும் ஈரூடக வாழி - | தவளை |
| 7. வெட்ட வெட்ட உயிர் பெறும் தட்டைப் புழு - | பிளனேரியம் |
| 8. இலங்கைக்கே உரித்தான தேரை இனம் - | பியுபோ கொட்டகம தேரை |

*எப். நுஹா நிஸார், கிரி/ கெகுணகொல்ல தே.பா.*

# முத்தான பத்தை அறிந்து கொள்ளுங்கள்



*சேஹா இஸ்மாயில், தரம்-9, முஸ்லிம் மகளிர் அரபுக் கல்லூரி, கள்-எலிய*

| | |
|---|---|
| 1. நல்ல மருந்து- | தன்னம்பிக்கை |
| 2. அதிக கஷ்டம் தரக்கூடியது- | கடன் |
| 3. கூடாதது- | கோபம் |
| 4. மிக மிக நல்லது - | உள்ளதைக் கொண்டு திருப்தியடைவது |
| 5. அழியாச் செல்வம் - | அறிவு |
| 6. நற்பெயர் தந்து மறுமையில் துணைபுரிவது - | தர்மம் |
| 7. மன்னிக்க முடியாத பெரும்பாவம் - | அல்லாஹ்வுக்கு இணைவைப்பது |
| 8. பெரும்பாவி - | அல்குர்ஆன், அல்ஹதீஸை மறுப்பவன் |
| 9. மிகக் கெட்ட துரோகி - | புறம் பேசுபவன் |
| 10. மிக மோசக்காரன் - | நயவஞ்சகன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY

## மனிதன் மனிதனாக வாழ 18 விடயங்கள்

| | |
|---|---|
| ◈ மிகவும் மதிக்கப்பட வேண்டியவர்கள் | தாய், தந்தை |
| ◈ மிகப் பெரிய வெகுமதி | மன்னிப்பு |
| ◈ இருக்க வேண்டிய பண்பு | பணிவு |
| ◈ மிகவும் வேண்டாத பண்பு | வெறுப்பு |
| ◈ மிகப் பெரிய தேவை | நம்பிக்கை |
| ◈ மிகக் கொடிய நோய் | பேராசை |
| ◈ மிகவும் சுலபமானது | குற்றங் காணல் |
| ◈ கீழ்த்தரமான விடயம் | பொறாமை |
| ◈ நம்பக் கூடாதது | வதந்தி |
| ◈ செய்யக் கூடாதது | நம்பிக்கைத் துரோகம் |
| ◈ செய்ய வேண்டியது | உதவி |
| ◈ விலக்க வேண்டியது | சோம்பேறித்தனம் |
| ◈ உயர்வுக்கு வழி | உழைப்பு |
| ◈ நழுவக் கூடாதது | வாய்ப்பு |
| ◈ ஆபத்தை விளைவிக்கக் கூடியது | அதிக பேச்சு |
| ◈ பிரிக்கக் கூடாதது | நட்பு |
| ◈ மறக்கக் கூடாதது | நன்றி |

**எம்.என்.எப். நிம்லா**
**தரம் 08, ஸ்ரீ இராம கிருஷ்ண மத்திய கல்லூரி, கலஹா**

## உலகில் மிகப் பெரிய உயிரி ரெட்வூட்

உலகில் மிகப் பெரிய உயிரி கலிபோர்னியா காடுகளில் வளரும் ரெட்வூட் எனும் தாவரமாகும். இதன் தண்டு செங்கபில நிறமானது. மிக உயரமாக, கம்பீரமாக வளரும் இது ஏறத்தாழ 24 மீற்றர் சுற்றளவு உடையதாகவும் 120 மீற்றர் உயரமாகவும் வளரும். வட அமெரிக்காவின் வடமேற்குக் கரையோரப் பகுதியில் இது (Redwood Creek Volley) காணப்படும். இத்தாவரத்தின் சராசரி நிறை 2000 தொன் என மதிப்பிடப்பட்டுள்ளது.


**ஆர்.எப். அப்ரின், தரம் - 08,**
**தி/ஆயிஷா மகளிர் ம.வி, கந்தளாய்**

## மொழிகளின் சிறப்புப் பெயர்கள்

| | |
|---|---|
| தமிழ் | - பக்தி மொழி |
| ஆங்கிலம் | - வணிக மொழி |
| பிரெஞ்சு | - காதல் மொழி |
| இத்தாலி | - இசை மொழி |
| கிரேக்கம் | - சட்ட மொழி |
| உருது | -கவிதை மொழி |

**எம்.பி.எம். மிக்தாத்**
**நல்லாந்தலுவை-மதுரங்குளி, புத்தளம்**

## அறிவோம் மனதில் பதிவோம்


Cattle Fish


கொரில்லா

பனிச் சிறுத்தை



எலிக் கங்காரு

- 3 இதயங்கள் கொண்ட மீன் - Cattle Fish
- நீர் குடிக்காத விலங்கு - எலிக் கங்காரு
- வெள்ளை நிறத்தைக் கண்டு அஞ்சும் விலங்கு - புலி
- உலகில் மெதுவாக ஊர்ந்து செல்வது - கடலாமை 0.17 மைல் வேகம்
- பூனைக் குடும்பத்தில் அழகானது - பனிச் சிறுத்தை
- எலியை செல்லமாக வளர்ப்பவர்கள் - இங்கிலாந்தவர்கள்
- 10 இலட்சத்திற்கு மேற்பட்ட வண்ணத்துப் பூச்சி உள்ள அருங்காட்சியகம் உள்ள நாடு - ஜேர்மன் (மியூனிச் நகரம்)
- வெட்டுக் கிளியை வறுத்து சாப்பிடுபவர்கள் - உகண்டா நாட்டவர்கள்
- மரங்களில் கூடுகட்டி வாழும் வாத்து - மாண்டரின் (சீனா, ஜப்பான் போன்ற நாடுகளில் வாழ்கிறது)
- மனிதனைப் போல கண்ணீர் விடும் குரங்கு - கொரில்லா
- அருங்காட்சியகம் அதிகமுள்ள நாடு - ஜேர்மன்

**அப்துல்லாஹ் ஹமீட், கல்முனைக் குடி**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# اللغة العربية
# அன்றாட வாழ்வில் அரபு மொழி

அஷ்ஷெய்க் யூ.எல்.எம். ரிஸ்மி (நளீமி)










## مَا هِوَايَتُكَ الْمُفَضَّلَةُ ؟

## உனது விருப்பத்திற்குரிய பொழுதுபோக்கு எது?








| | |
|---|---|
| الرَّسْمُ | 1. சித்திரம் வரைதல் |
| مُشَاهَدَةُ التِّلْفِزْيُوْنَ | 2. தொலைக்காட்சி பார்த்தல் |
| قِرَاءَةُ الْكُتُبِ | 3. புத்தகம் வாசித்தல் |
| جَمْعُ الطَّوَابِعِ | 4. முத்திரை சேகரித்தல் |
| الصِّحَافَةُ | 5. இதழியல் |
| تَرْبِيَةُ الأَسْمَاكِ | 6. மீன் வளர்ப்பு |
| كُرَةُ الْقَدَمِ | 7. கால்பந்து விளையாடுதல் |
| كُرَةُ السَّلَّةِ | 8. கூடைப் பந்து விளையாடுதல் |
| كُرَةُ الطَّائِرَةِ | 9. கரப் பந்து விளையாடுதல் |
| الْمُرَاسَلَةُ | 10. பேனா நண்பர் |
| قِرَاءَةُ الْمَجَلاَّتِ | 11. சஞ்சிகை வாசித்தல் |
| قِرَاءَةُ الصُّحُفِ | 12. பத்திரிகை வாசித்தல் |
| صَيْدُ السَّمَكِ | 13. மீன் பிடித்தல் |
| الإِسْتِمَاعُ إِلَى الرَّادِيُو | 14. வானொலி கேட்டல் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

مَنْ مُطْرِبُكَ الْمُفَضَّلُ؟ — உனது அபிமான பாடகர் யார்?

مَنْ مُدَرِّسُكَ الْمُفَضَّلُ؟ — உனது விருப்பத்திற்குரிய ஆசிரியர் யார்?

مَنْ لاَعِبُكَ الْمُفَضَّلُ؟ — உனது அபிமான விளையாட்டு வீரர் யார்?

مَنْ كَاتِبُكَ الْمُفَضَّلُ؟ — உனது அபிமான எழுத்தாளர் யார்?

أَتُفَضِّلُ الْبُرْتُقَالَ أَمِ التُّفَّاحَ؟ — நீங்கள் தோடம்பழத்தை விரும்புகிறீர்களா? அல்லது அப்பிளை விரும்புகிறீர்களா?

أَتُفَضِّلُ كُرَةَ الْقَدَمِ أَمْ كُرَةَ السَّلَّةِ؟ — கால்பந்து (விளையாட) விரும்புகிறீர்களா? அல்லது கூடைப்பந்து (விளையாட) விரும்புகிறீர்களா?

أَتُفَضِّلُ الْعَصِيْرَ أَمِ الْحَلْوَى؟ — பழச்சாறு விருப்பமா? அல்லது இனிப்புப் பண்டம் விருப்பமா?

أَتُفَضِّلِيْنَ الرَّادِيُو أَمِ التِّلْفِزْيُوْنَ؟ — வானொலி கேட்க விரும்புகிறீர்களா? அல்லது தொலைக்காட்சி பார்க்க விரும்புகிறீர்களா?

أَتُفَضِّلِيْنَ النَّوْمَ أَمِ الْقِرَاءَةَ؟ — நித்திரை கொள்ள விரும்புகிறீர்களா? அல்லது வாசிக்க விரும்புகிறீர்களா?

أَتُفَضِّلِيْنَ الْعَمَلَ أَمِ الدِّرَاسَةَ؟ — வேலை செய்ய விரும்புகிறீர்களா? அல்லது படிக்க விரும்புகிறீர்களா?

أَتُفَضِّلِيْنَ الدَّجَاجَ أَمِ السَّمَكَ؟ — கோழி இறைச்சி (சாப்பிட) விரும்புகிறீர்களா? அல்லது மீன் (சாப்பிட) விரும்புகிறீர்களா?

---

## உனது விருப்பத்திற்குரிய பொழுதுபோக்கு எது? مَا هِوَايَتُكَ الْمُفَضَّلَةُ ؟

مَا هِوَايَتُكَ الْمُفَضَّلَةُ يَا أَحمد؟ — அஹ்மதே, உனது விருப்பத்திற்குரிய பொழுதுபோக்கு எது?

هِوَايَتِيْ الْمُفَضَّلَةُ كُرَةُ الْقَدَمِ — எனது விருப்பத்திற்குரிய பொழுதுபோக்கு கால்பந்து விளையாடுவது.

مَا هِوَايَةُ صَدِيْقِكَ الْمُفَضَّلَةُ؟

هِوَايَةُ صَدِيْقِيْ الْمُفَضَّلَةُ ..........

مَا هِوَايَةُ وَالِدِكَ الْمُفَضَّلَةُ؟

هِوَايَةُ وَالِدِي الْمُفَضَّلَةُ ..........

مَا هِوَايَةُ أَخِيْكَ الْمُفَضَّلَةُ؟

هِوَايَةُ أَخِيْ الْمُفَضَّلَةُ ..........

مَا هِوَايَةُ أُخْتِكَ الْمُفَضَّلَةُ؟

هِوَايَةُ أُخْتِي الْمُفَضَّلَةُ ..........

مَا هِوَايَةُ مُدَرِّسِكَ الْمُفَضَّلَةُ؟

هِوَايَةُ مُدَرِّسِي الْمُفَضَّلَةُ ..........

مَا هِوَايَةُ خَالِكَ الْمُفَضَّلَةُ؟

هِوَايَةُ خَالِي الْمُفَضَّلَةُ ..........

### தவறுக்கு வருந்துகிறோம்

சென்ற இதழில் அரபுப் பாடத்தில் இடம்பெற்ற புலி உறுமும் النَّمِرُ يَزْئَرُ என்பதனை النَّمِرُ يَقْبَعُ புலி உறுமும் என திருத்தி வாசிக்கவும். (ஆ-ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Sister Rumman

## HOW MUCH DO YOU KNOW?

Assalamu alaikum dear friends,


This time, for a change,+ the page is prepared by Mrs. Riyaza Naleer, a well experienced teacher of English. Enjoy!



## Have you read this poem before?

### Fishing

When I go fishing
I'm always wishing
Some fish will be my prize
But while I'm fishing
The fish are wishing
Otherwise
And all the wishes
Of all the fishes
Seem always to come true
So all my wishes
To catch some fishes
Never do
-Unknown-



*Let all your wishes come true!!*





Wishes make our lives interesting, bright and lead us to reach our goals. To reach that goal,

**Let's learn to use 'have' and 'has' properly.**

Here is a butterfly. It sits on a flower. It **has** two pairs of wings. We **have** hands but the **butterfly has** no hands. **It has** six legs. How many legs do you **have**? Look at its head. It is very small. **It has** many eyes but no teeth. Its body is thin and long. **It has** no bones as you **have**. It is an insect. It is very pretty and happy.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Now let's notice the following construction:

| | |
|---|---|
| The *butterfly has* wings. | *Butterflies have*wings. |
| The bird *has feathers* | *Birds have* feathers |
| The tree *has branches* | *Trees have* branches |

## DO YOU KNOW?

A person who is crazy about using internet is a "**netnut**".
Net users are called '**netizens**'




## Just for your thought!



The world's largest flower is *Raflesia*. It has no leaves, stem, or root. It is a parasite.

The month July was named after the king Julius Caesar. The month August was named after the king Augustus Caesar.

## Truth about our teeth



Our teeth work hard. Every time we eat something they cut, tear, and grind our food before it is swallowed. The doctor who treats our teeth is a dentist.


- Gums help to hold the teeth
- The first set of temporary teeth is called milk teeth.
- The outer coating of the tooth is enamel.
- The hole in the tooth is called cavity.
- Vitamin D keeps your gums healthy.

**But** remember,

Eating lots of sweets, chocolates and peppermints spoils your teeth. For healthy teeth you must brush your teeth twice a day.



**Before I take leave I'll remind you the prayer times.**



ISLAM
- I for Isha
- S for Subah
- L for Luhar
- A for Asar
- M for Magrib



**Thank you so much Mrs. Riyaza Naleer! We hope to meet you again.**

Now friends, let's come back to our usual journey.

### Word of the month

*Loyal*- faithful, and dedicated. This is an *adjective*. You use it to describe a noun.
*"Ali is a loyal servant"*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## Your corner

The world is a hazy stage,
To which all are attracted towards.

It's something miracle,
Which stimulates all to do every thing,
Can we heal this magic globe?......

**Oh! we can**..............................................................
If we play the role correctly,
**We can**.......................................................
If we realize our mistakes,
**We can**.......................................................
If we put forward innovative ideas.
**We can**.......................................................
If we diagnose the mental diseases,
**We can**.......................................................
If we preserve it from pollutions,
**We can**.......................................................
If we eradicate contradictions,
**We can**.......................................................
If we eliminate discrimination,
**We can**.......................................................
If we welcome a new passion,
All these we can.......................................

When we realize & keep our
fluctuating psyche stable
With the help of **ALL-MIGHTY**!

**M.N. Fathima Najla,**
**Grade 12,**
**Puttalam**

# My dream about my future



When I grow older, I would become an engineer. An engineer must know very well about Mathematics and Physics. If I be an engineer, Insha Allah I would build bridges, buildings, roads, and also I would help the poor people. I hope that I would achieve my best to build more and more bridges in places where people find hard to cross. Insha Allah I would render my service towards the needy and the poor. And also I'll select good house plans to my friends. I'll make wonderful hotels too.


I would teach good values for the children and my family members. And also I won't take more money from the poor children. I will teach Islam and its teachings to all of the mankind. Thereby I will do my duty as Allah asked from every one of us. I will help the poor children to continue their studies.

**M.K. Abdul Rahman**
**6 B, Madina National School,**
**Madawala**

*I'm eagerly waiting for your contributions with comments, stories, poems and essays. The best ones will be published insha Allah.*


*So write to me at* Or mail me to

HOW MUCH DO YOU KNOW?



A 61/ 5,
Zahira Road,
Mawanella

aharamenglish@gmail.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாறு

## 10, 11 ஆம் தர மாணவர்களுக்கானது

கலாநிதி கே.எம்.எம். இக்பால்

### வரலாறு 10ம் தரம்


i. பின்வரும் அரசர்களுள் தம்பதெனிய இராச்சியத்தை ஆட்சி புரிந்த 3 அரசர்களைப் பெயரிடுக.

ஐந்தாம் பராக்கிரமபாகு மன்னன், நான்காம் விஜயபாகு மன்னன், இரண்டாம் பராக்கிரமபாகு மன்னன், மூன்றாம் விக்கிரமபாகு மன்னன்

(3 புள்ளிகள்)

ii. அருகிலுள்ள தேசப்படத்தில் இலங்கையின் புராதன தலைநகரங்களுள் 4 நகரங்கள் a,b,c,d ஆகிய இலக்கங்களால் சுட்டிக்காட்டப்பட்டுள் ளன. அந் நகரங்களை அதே ஒழுங்கில் தருக.

(4 புள்ளிகள்)




iii. தலைநகரங்கள் மாற்றமடைந்தபோது இலங்கையின் பொருளாதாரத்தில் ஏற்பட்ட 2 மாற்றங்களை விளக்குக. (5புள்ளிகள்)

iv. 13ம் நூற்றாண்டு தொடக்கம் 15ம் நூற்றாண்டு வரை இலக்கியங்களிலும் கட்டடக் கலையிலும் ஏற்பட்ட வளர்ச்சியினை விளக்குக.

(6 புள்ளிகள்)

### விடை

i. அ) நான்காம் விஜயபாகு
ஆ) இரண்டாம் பராக்கிரமபாகு
இ) மூன்றாம் விஜயபாகு

ii. a. அனுராதபுரம் b. பொலன்னறுவை
c. கம்பளை d. கோட்டை

iii. **அ. நெல் உற்பத்தி வீழ்ச்சியடைந்தது**

அநுராதபுரக் காலத்திலும் பொலன்னறுவைக் காலத்திலும் நெற்செய்கை பெருவளர்ச்சி பெற்றிருந்தது. ஆனால், தலைநகரங்கள் தென்மேற்கு நோக்கி இடம்பெயர்ந்த காலத்தில் நெல் உற்பத்தி வீழ்ச்சியடைந்தது. பொலன்னறுவைக் காலத்தின் இறுதியில் மாகனின் படையெடுப்பு நிகழ்ந்தது. இப்படையெடுப்பினால் குளங்களும் நீர்ப்பாசனக் கால்வாய்களும் பாதிக்கப்பட்டன. யுத்தத்தினால் அதிகமான விவசாயிகள் உயிரிழந்தனர். பலர் உடல் ஊனமுற்றவர்களாக மாறினர். இவ்வாறான நிலை ஏற்பட்டதனால் நெல் உற்பத்தி வெகுவாக வீழ்ச்சியடைந்தது. மேலும் இக்காலத்தில் ஈரப்பலா, கிழங்கு வகைகள் முதலியன மக்களுக்கு உணவுகளாகக் கிடைத்தன. இதனால் நெல்லின் முக்கியத்துவம் குறைவடைந்தது.

**ஆ. கறுவா உற்பத்தி முக்கியத்துவம் அடைந்தமை**

இராசரட்டை காலத்தில் அதாவது நீர்வள நாகரிக காலத்தில் நெல் உற்பத்தியே முக்கியம் பெற்றது. கிராமங்கள் தன்னிறைவுடன் விளங்கியமையால் வர்த்தகம் மிகச் சிறிய அளவிலேயே நடைபெற்றது ஆனால், தலைநகரங்கள் தென்மேற்கு நோக்கி நகர்ந்த காலத்தில் வர்த்தகப் பயிர்கள் முக்கியம் பெற்றன. கறுவா, ஏலம், கராம்பு, பாக்கு, தென்னை முதலியன முக்கிய வர்த்தகப் பயிர்களாக மாற்றமடைந்தன. கறுவா, ஏலம் போன்ற வாசனைத் திரவியங்களுக்கு ஐரோப்பிய நாடுகளில் அதிக கிராக்கி நிலவியது. வெளிநாட்டு வர்த்தகம் படிப்படியாக அதிகரித்தது. முஸ்லிம்களே வெளிநாட்டு வர்த்தகத்தை நடத்தினர். இவர்கள் கொழும்பு, புத்தளம், கற்பிட்டி, பேருவளை, காலி முதலிய கரையோரப் பகுதிகளில் தமது குடியிருப்புக்களை அமைத்து வெளிநாட்டு வர்த்தகத்தில் ஈடுபட்டனர்.

iv. **அ. இலக்கியம்**

நீர்வள நாகரிக காலத்தைவிட, தென்மேற்கு நோக்கி தலைநகரங்கள் இடம்பெயர்ந்த காலத்தில் அதிகமான இலக்கியங்கள் இலங்கையில் தோன்றின. தம்பதெனியவை ஆட்சி செய்த இரண்டாம் பராக்கிரமபாகு சிறந்த இலக்கியவாதியாகவும் திகழ்ந்தான். இவன் 'விசுத்தி மார்க்க சன்னய', 'கவிசிலுமின' முதலிய இலக்கியங்களைப் படைத்தான். தம்பதெனிய காலத்திலேயே 'தம்பதெனி கதிகாவத', 'சத்தர்ம ரத்னாவலிய' முதலிய நூல்களும் தோன்றின. குருநாகல் காலத்தில் 'தலதா சிரித', 'சிங்கள போதி வங்ஸ' முதலிய இலக்கியங்கள் எழுந்தன. கம்பளைக் காலத்தில் தூதுவிடும் இலக்கியங்கள் எழுந்தன. கோட்டை காலம் சிங்கள இலக்கியத்தின் 'பொற்காலம்' என்று போற்றப்படுகின்றது. 'சரசோதிமாலை', 'இரகுவம்சம்' முதலிய இலக்கியங்கள் இக்காலத்தில் எழுந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆ. கட்டடக் கலை**

இக்காலத்தில் கட்டடக் கலை விருத்தியடைந்தது. தம்பதெனிய, யாப்பஹுவ, குருணாகல், கம்பளை முதலிய இடங்களில் அமைக்கப்பட்ட பல கட்டடங்கள் இக்கால மக்களின் கலை உணர்வையும் தொழில்நுட்ப ஆற்றலையும் முயற்சியையும் எமக்கு விளக்குகின்றன. யாப்பஹுவ இராசதானியில் இடிபாடுகளில் எஞ்சியிருக்கும் படிக்கட்டு இக்கால கட்டடக் கலையின் சிறப்புக்கு சிறந்த உதாரணமாகும். லங்காதிலக விகாரையில் சிங்கள-தமிழ் கலைகளின் ஒற்றுமையை அறிய முடியும். கம்பளை காலத்தில் நிறுவப்பட்ட கடலாதெனிய விகாரை இந்தியக் கட்டடக் கலைஞர்களின் உதவியுடன் நிர்மாணிக்கப்பட்டது.

## 11ம் தரம்

i. சிப்பாய்க் கலகம், வங்காளம் இரண்டாகப் பிரிக்கப்பட்டமை, ஜாலியன் வாலா பாக் படுகொலை ஆகிய 3 சம்பவங்களும் நடைபெற்ற ஆண்டுகளை முறையே தருக. (3 புள்ளிகள்)

ii. பிரித்தானியா, ஸ்பானியா, போர்த்துக்கல், ஒல்லாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகளுள் இந்தியாவை ஆட்சி செய்த 4 நாடுகளைத் தருக. (4 புள்ளிகள்)

iii. ஆங்கிலேயருக்கு எதிராக இந்தியர்கள் சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுத்தமைக்கான காரணங்கள் இரண்டை விளக்குக. (5 புள்ளிகள்)

iv. ஜப்பானிய வளர்ச்சிக்கு மேஜிஜி சீர்திருத்தங்கள் எவ்வாறு காரணங்களாக அமைந்தன. இரண்டு உதாரணங்கள் மூலம் விளக்குக. (6 புள்ளிகள்)

i. *1957, 1906, 1919*

ii. போர்த்துக்கல், ஒல்லாந்து, பிரான்ஸ், பிரித்தானியா

iii. **அ. சிப்பாய்க் கலகம்**

ஆங்கிலேயருக்கு எதிரான கிளர்ச்சிகளுக்கு வழிகாட்டியாக விளங்கியது சிப்பாய்க் கலகமாகும். இந்திய நலன்களுக்கு விரோதமாக ஆங்கிலேயர் நடந்து கொண்டமையால் படைவீரர்கள் (சிப்பாய்கள்) பிரித்தானிய ஆட்சிக்கு எதிராக 1857.05.10ல் கலகம் செய்தனர். இக்கலகம் மத்திய பிரதேசம், டில்லி, லக்னோ, வேலூர், கல்கத்தா முதலிய இடங்களில் நடைபெற்றது. சிப்பாய்க் கலகத்தினால் இந்தியர்களின் உள்ளங்களில் நாட்டுப்பற்று வளர்ச்சியடைந்தது. இதனால் இந்தியர்கள் பல இடங்களிலும் ஆங்கிலேயரின் ஆட்சிக்கு எதிராக கிளர்ச்சி செய்தனர்.

**ஆ. ஜாலியன் வாலா பாக் படுகொலை**

பஞ்சாப் மாநிலத்தில் அமிர்தசார் நகரில் அமைந்துள்ள ஜாலியன் வாலா பாக் மைதானத்தில் கூடியிருந்த இந்திய மக்களை ஆங்கில இராணுவத்தினர் சுட்டனர். இதனால் இந்திய மக்களுக்கு ஆங்கிலேயர் மீதான வெறுப்பு அதிகரித்தது. இதனால் மக்கள் தீவிரமாக ஆங்கிலேயருக்கு எதிராகச் செயற்பட்டனர். வெள்ளையர்களால் கைதுசெய்யப்பட்ட இந்தியத் தலைவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து மக்கள் 1919.04.13ல் மைதானத்தில் ஒன்று கூடினர். இம்மக்கள் மீது ஆங்கிலத் தளபதி ஜெனரல் டயர் தலைமையிலான ஓர் இராணுவக் குழு பீரங்கியால் சுட்டது. இதனால் 379 பேர் மரணமடைந்தனர். இப்படுகொலை நிகழ்வு இந்திய சுதந்திரப் போராட்டம் உக்கிரமடைவதற்கு வழிவகுத்தது.

iv. **அ. புதிய பொருளாதாரக் கொள்கை நடைமுறைக்கு வந்தது**

மேஜிஜி சீர்திருத்தங்களின் விளைவாக புதிய பொருளாதாரக் கொள்கைகள் ஜப்பானில் நடைமுறைப்படுத்தப்பட்டன. இன்று ஜப்பான் உலகின் முதன்மை வாய்ந்த கைத்தொழில் நாடாக மாறியமைக்கு, மேஜிஜி சீர்திருத்தங்களே அடித்தளமாக அமைந்தன. மேற்கத்தேய தொழிநுட்பத்தைப் பயன்படுத்தி, கைத்தொழில் அபிவிருத்தி செய்யப்பட்டது. கைத்தொழிலுக்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டன. 'மிட்சுயி', 'மிட்சுபிஸி' முதலிய பல கைத்தொழில் நிறுவனங்கள் பல கைத்தொழில் பொருட்களை உற்பத்தி செய்தன. மிட்சுயி நிறுவனம் மிஸ்டரை என்பவராலும் மிட்சுபிஸி தாபனம் சத்சுமா சமுராயுடன் சம்பந்தப்பட்டவர்களாலும் ஆரம்பிக்கப்பட்டன. இவ்வாறு கைத்தொழில் வளர்ச்சியடைந்ததனால் 1930ம் ஆண்டில் 6 மில்லியன் தொழிலாளர்களைக் கொண்டதாக ஜப்பானில் கைத்தொழில் வளர்ச்சியடைந்தது.

**ஆ. புதிய யாப்பு ஏற்படுத்தப்பட்டமை**

மேஜிஜி சீர்திருத்தங்களின் முக்கிய ஒரு விளைவாக புதிய யாப்பு அமைகின்றது. இந்த யாப்பு 1889ல் ஜப்பானிய பேரரசரால் பிரகடனப்படுத்தப்பட்டது. இந்த யாப்பின் மூலம் 'டயட்' என்ற பாராளுமன்றம் உருவாக்கப்பட்டது. இப்பாராளுமன்றம் பிரபுக்கள் சபை, பிரதிநிதிகள் சபை என்ற 2 சபைகளையும் கொண்டதாக அமைந்தது. பிரபுக்கள் சபையில் 500 அங்கத்தவர்களும் பிரதிநிதிகள் சபையில் 300 அங்கத்தவர்களும் இடம் பெற்றார்கள். இவ்வாறு ஜப்பானில் 1889ல் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய யாப்பு ஜப்பானில் ஜனநாயகம் வளர்ச்சியடைய உறுதியான அடித்தளத்தை இட்டது. இந்த யாப்பு மட்டுப்படுத்தப்பட்ட வாக்குரிமையை வழங்கியது. 4½ இலட்சம் மக்கள் வாக்குரிமையைப் பெற்றனர். பின்னர் இந்த வாக்குரிமை பரவலாக்கப்பட்டது. ■


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைச் சரம்





## முயன்றிடு மனிதா

முயன்றிடு மனிதா உறுதியுடன்
வெற்றி பெறுவாய் நிச்சயமாய்
தோல்விகள் என்றும்
வீழ்ச்சிகள் அல்ல
துன்பங்கள் என்றும்
தொடர்பவை அல்ல

இன்று நீ அடையும்
தோல்விகள்
நாளைய உன் வெற்றியின்
படிக்கற்கள்
இன்று நீ எதிர்கொள்ளும்
துன்பங்கள்
நாளைய உன் சந்தோசத்தின்
திறவுகோல்கள்

சோதனைகள்தனை
உறுதியுடன் எதிர்கொண்டு
சாதனைகள் படைத்த
சான்றோரின் வாழ்வைப்
புரட்டி நீ பார்த்திடுவாய்
உறுதியுடனே உழைத்திடுவாய்
வெற்றி பெறுவாய் நிச்சயமாய்

எம்.ஏ. றிஸ்னா அபூபக்கர்
அட்டுலுகம

## கல்வி

கல்வி எனும் கரையில் நின்று
முயற்சி எனும் படகில் ஏறி

பரீட்சை எனும் கடலை அடைந்து
வெற்றி எனும் தூண்டிலில் போட்டு
சாதனை புரி

நாளை வெற்றி உனக்கே
நம்பிக்கையோடு- கற்றுக்கொள்
நாளை கல்வியும் உன்னோடுதான்

ஆர். அஸ்மா
தரம்– 08
தி/ ஆயிஷா மகளிர் ம.வி, கந்தளாய்

## வாழ்வின் வளர்பிறை

தோல்வி என்பது
தேய்பிறை
வெற்றி என்பது
வளர்பிறை
பிறையை நிறைவாய்
ஏற்று
மகிழ்வாய் வாழத்
தெரிந்தவன்
எதற்கும் துணிந்தவன்

எம்.எஸ்.எப். ரிகாஸா
தரம்: 11 தெல்தோட்டை, மு. ம. கல்லூரி

## இலக்கை நோக்கிய பயணம்



பிணைந்திட்ட சங்கிலியாய்
எம் கைகள் கோர்த்து
நாளை
புது சமூகத்தை
பூத்திட வைப்போம்...

எம் அறிவு
பூமிதனை சுழற்றிடப் போதுமே
இதனை
பாருலகம் நாளை
பார்த்திடக் காத்திருக்குமே

பொன்னானது நேரம்
வீணாகக் கழித்திட்டால்
அழிந்திடும்
எம் எதிர்காலமே

வீண் விளையாட்டு - எம்
அறிவை மங்கிடச் செய்யுமே
அப்போது
இவ்வுலகம்- எம்மை
இழி கொண்டு நோக்கிடுமே
கழிந்திட்ட காலமது
கடைசி வரை மீளாது

எதிர்நோக்கும் காலத்தை
பயனாகக் கழித்திட்டால்
நாளை வாழ்வு இனிதாகும்
பூவுலகம் மலர்ந்திடும்
அறிவொளி சுடர் வீசிடும்
அண்ட சராசரமுமே
எம் கையில் வந்திடும்

எம்மை ஓர் உலகம்
எதிர்பார்த்துக் காத்திருக்கு
அந்நாளை எண்ணி
தொடர்வோம்
எம் பயணத்தை
இது
இலக்கு நோக்கிய
ப-ய-ண-ம்

எம்.என். பாத்திமா ஹரீஸா, கலஹா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னேற்றப் பாதையில்




# ஹெம்மாதகம அல்அஸ்ஹர்
## (நவோத்ய பாடசாலை)

**சப்ரகமுவ** மாகாணம், கேகாலை மாவட்டத்தில் மாவனல்லைத் தேர்தல் தொகுதியில் ஹெம்மாதகமை பிரதேசத்தில் அமைந்திருப்பது அல்அஸ்ஹர் ம.வி. (நவோத்ய பாடசாலை). ஹெம்மாதகமைப் பிரதேச மக்களின் கல்வி முன்னேற்றத்தில் ஆர்வம் காட்டிய மர்ஹூம் யூஸுப் மத்திசம் அவர்கள் வழங்கிய காணி யில் 1917ம் ஆண்டு மார்ச் மாதம் 25ம் திகதி 'வாடிய தன்னை ஆண்கள் பாடசாலை' எனும் பெயரில் இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட வேளை, ஓர் ஆசிரியரும் 7 மாண வர்களும் மாத்திரமே இங்கு கற்றல், கற்பித்தல் நடவ டிக்கைகளில் ஈடுபட்டனர். 1920ம் ஆண்டு இது அரச பாடசாலையாக மாற்றப்பட்டது. அன்று முதல் இன்று வரை இப்பிர தேசத்திலுள்ள பெற்றோர், சமூக ஆர்வலர்கள், திறமையான அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களின் ஒத்து ழைப்புடன் இப்பாடசாலை முன்னேற்றம் கண்டு வந்துள்ளது.

இப்பாடசாலையின் முதல் அதிபர் யாழ்ப்பா ணத்தைச் சேர்ந்த யு. சுவாம்பிள்ளை என்பவராவார். முதல் மாணவன் ஹிஜ்ராகமையைச் சேர்ந்த மர்ஹூம் முபாரக் ஆசிரியர் ஆவார். இவர் பிற்காலத்தில் இதே பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றினார் என்பதும் குறிப்பிடத்தக்கது. இப்பாடசாலைக்கு முதன்முதலாக அரச நியமனம் பெற்ற முதல் அதிபர் தற்போதைய நீதியமைச்சர் அப்துல் ரஊப் ஹகீம் அவர்களின் பாட்டனார் என்பதும் நினைவுகூரத்தக்கது.

1940களில் காலி, கஹட்டோவிட்ட போன்ற பகுதிக ளிலிருந்து இடமாற்றலாகி வந்த ஆசிரியர்கள் இப் பாடசாலையின் கல்வி வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டனர். அதேவேளை, இப்பாடசாலையின் வளர்ச்சியில் ஹெம்மாதகமைப் பிரதேசத்திலுள்ள சகல கிராமங்க ளிலும் இருந்த சமூக சேவையாளர்கள், தனவந்தர்கள் மற்றும் அரசியல்வாதிகள் எனப் பலரும் பங்கு கொண் டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இங்கு முதன் முதலாகக் கட்டப்பட்ட யூஸுப் மண்டபம் 1960களில் கல்வி அமைச்சராக இருந்த பி.பீ.ஜி கலுகல்ல அவர்களினால் கட்டிக் கொடுக்கப்பட்டது.

1960இல் அதிபராகக் கடமையாற்றிய மர்ஹூம் எம்.எச்.எம். ரஷீத் அதிபர் அவர்களின் காலத்தில் இப் பாடசாலை மகா வித்தியாலயமாகத் தரமுயரத்தப்பட் டது. 1962இல் இப்பாடசாலையின் அதிபர் பொறுப்பை ஏற்ற நீர்கொழும்பைச் சேர்ந்த ஹாஜா அமீர் அவர்களின் பதவிக்காலத்தில் இப்பாடசாலை பெரும் முன்னேற்றம் கண்டது. இவரது காலத்திலேயே, வாடியதன்னை ஆண்கள் பாடசாலை என அழைக்கப்பட்ட இப்பாட சாலை ஹெம்மாதகமை அல்அஸ்ஹர் மு.ம.வி. எனப் பெயர் மாற்றப்பட்டது.

அதேபோல் 1968இல் மீண்டும் அதிபராகப் பதவியேற்ற மர்ஹூம் எம்.எச்.எம். ரஷீத் அவர்களது காலத்தில் இப்பாடசாலை க.பொ.த. (உ/த) வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டன. அவரின் பின் 1971ம் ஆண்டில் பதவியேற்ற ஜனாப் எம்.எஸ்.ஏ. வாஹித் அதிபரின் காலத்தில் பாடசாலைக் கல்வி மற்றும் பௌதிக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளங்களில் முன்னேற்றம் கண்டது. 1971இல் விஞ்ஞானப் பிரிவும் 1972 இல் வர்த்தகப் பிரிவும் ஆரம்பிக்கப்பட்டன. மேலும் இக்காலப் பகுதியிலேயே பெற்றோரின் ஒத்துழைப்புடன் அக்பர் மண்டபம் கட்டப்பட்டதோடு விளையாட்டு மைதானமும் அமைக்கப்பட்டது.

இவரது காலத்தின் பின் 1983ம் ஆண்டில் அதிபராகப் பதவியேற்ற அல்ஹாஜ் எஸ்.எம். நியால் அதிபர் அவர்களின் பதவிக் காலத்தில் சந்திரா மண்டபமும் ஜாயா மண்டபமும் அமைக்கப்பட்டதோடு விளையாட்டு மைதானமும் விரிவுபடுத்தப்பட்டது. 1962 இல் பதவியேற்ற அல்ஹாஜ் ஏ.டப்ளியு.எம். ஹுஸைன் அவர்களது பதவிக் காலத்தில் பழைய மாணவர் சங்கத்தினர் சிறப்பாக இயங்கி பாடசாலையின் அபிவிருத்திக்கும் இடநெருக்கடியைத் தீர்க்கும் வகையிலும் கட்டடங்கள் அமைக்கும் பணியை மேற்கொண்டனர்.

1993ம் ஆண்டு அதிபர் பொறுப்பையேற்ற அல்ஹாஜ் ஜே.எம். நயிமுதீன் அவர்களின் சேவைக் காலத்தில் கல்வித்துறையிலும் பௌதிகத் துறையிலும் வேகமாக வளர்ச்சி கண்டது. இவரது காலத்தில் புதிய கல்விச் சீர்திருத்தத்திற்கு அமைய நவோதயப் பாடசாலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், அதிபர் அவர்களினது அரும் முயற்சியினால் ரூபா 2கோடி நிதி பாடசாலையின் அபிவிருத்திக்கு ஒதுக்கப்பட்டது. மேலும், இவரது காலத்தில் வாசிகசாலைக் கட்டடம், விஞ்ஞான ஆய்வுகூடம், பல இலட்சம் ரூபா பெறுமதியான பாடசாலை உபகரணங்கள் பாடசாலைக்கு கிடைக்கப் பெற்றன. மேலும் இக்காலத்தில் முதன் முதலாக வைத்தியத்துறைக்கு ஒரு மாணவி எமது பாடசாலையிலிருந்து தெரிவு செய்யப்பட்டமை முக்கிய அம்சமாகும்.

2002ம் ஆண்டின் பின் பதவியேற்ற அல்ஹாஜ் ஏ.ஸீ.எம். அஸ்ஹர் மற்றும் அல்ஹாஜ் எம்.ஐ.எம். ஜுனைத் ஆகியோரது சேவைக்காலத்திலும் பல அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அல்ஹாஜ் எம்.ஐ.எம். ஜுனைத் அதிபர் அவர்களின் தமது பதவியிலிருந்து ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து அப்போது பிரதி அதிபராக சேவையாற்றிய அல்ஹாஜ் எம்.ஏ.எம். நிஸ்தார் அவர்கள் அதிபர் பொறுப்பை ஏற்றார். இவரது அயராத முயற்சியின் காரணமாக கல்வி, விளையாட்டு மற்றும் பௌதிக ரீதியாகவும் பாடசாலை பாரிய வளர்ச்சி கண்டு வருகின்றது.

2006ம் ஆண்டு பதவி ஏற்ற அதிபர் அல்ஹாஜ் நிஸ்தார் அவர்களின் தலைமையில் இன்று சுமார் 1500 மாணவ மாணவிகளும் 70 ஆசிரிய ஆசிரியைகளும் கற்றல் கற்பித்தல் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். இவரது அயராத முயற்சியின் காரணமாக தரம் ஐந்து புலமைப்பரிசில் பெறுபேறுகள் மற்றும்

2010ம் ஆண்டு ஆங்கில மொழி மூல வகுப்பில் 9 ஏ சித்திகளைப் பெற்று முதலாமிடத்தைப் பெற்ற மாணவி எம்.எச்.எப். அப்ரா



க.பொத.(சா/த) தரப் பரீட்சைப் பெறுபேறுகள் க.பொ.த (உ/த) பெறுபேறுகள் என்பவற்றில் பாடசாலை பெரும் சாதனை படைத்துள்ளது.

கடந்த நான்கு வருடங்களில் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சுமார் 40-45 மாணவர்கள் சித்தி பெற்றுள்ளனர். அதேபோல் க.பொ.த.(சா/த) தரப் பரீட்சையில் 2009, 2010ம் ஆண்டுகளில் 2 மாணவிகள் ஆங்கில மொழி மூல வகுப்பில் 9 ஏ சித்திகளைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. மேலும் கடந்த 4 வருடங்களிலும் ஆங்கில மொழி மூல வகுப்பின் க.பொ.த. (சா/த) தரப் பரீட்சையில் நூறு வீத சித்தி பெற்றுள்ளமை இங்கு சுட்டிக்காட்டத் தக்கது. அதேபோல் க.பொ.த. (உ/த) பரீட்சையிலும் சிறந்த பெறுபேறுகள் கிடைக்கப்பெற்று வருடாந்தம் பல மாணவ மாணவிகள் வைத்திய மற்றும் கலை, பௌதிகத் துறைகளுக்கு பல்கலைக்கழகம் சென்றுள்ளனர்.

பௌதிக வளங்களைப் பொறுத்தவரையில் விளையாட்டு மைதானம் விஸ்தரிக்கப்பட்டது. மேலும் மாவனல்லை பிரதேச சபை உறுப்பினர் எம்.ஆர்.எம். லியாவுதீன் அவர்களின் ஒத்துழைப்புடன் சப்ரகமுவ மாகாண முதலமைச்சர் கௌரவ மஹீபால ஹேரத் அவர்களின் நிதி உதவியால் சுமார் ஒரு கோடி 70 லட்சம் பெறுமதியான கேட்போர் கூடமும் மற்றும் உயர்தர பிரிவுக்கான விஞ்ஞான ஆய்வு கூடமும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

5S திட்டம் பாடசாலையில் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளதோடு பாடசாலைச் சுற்றாடலும் அலங்கரிக்கப்பட்டு அழகாகக் காட்சியளிக்கின்றது.



வன்பந்து கிரிகெட் குழுவுக்கு கேகாலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திரு. கனக ஹேரத் அவர்கள் விளையாட்டு உபகரணங்களை அன்பளிப்புச் செய்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும், மீலாத் தினப் போட்டிகள், தமிழ்த் தினப் போட்டிகள் மற்றும்ஆங்கில, சிங்கள தினப் போட்டி களிலும் விளையாட்டுப் போட்டிகளிலும் இப்பா டசாலை மாணவர்கள் பங்குபற்றி அகில இலங்கை யில் நடைபெறக் கூடிய போட்டிகள் வரை சென்றமை குறிப்பிடத்தக்கவை. 2009ம் ஆண்டு இப்பாடசாலையின் மென்பந்து கிரிக்கட் குழு வலய, மாகாண மட்டங்க ளில் முதலிடம் பெற்று அகில இலங்கையில் நடை பெற்ற போட்டி வரை சென்று சுப்பர் எய்ட் (super eight)க்கு தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, வன்பந்து (Hard Ball) கிரிகெட் குழு ஒன்று கடந்த ஆண்டு அமைக்கப்பட்டதும் ஒரு பிரதான விடயமாகும். சப்ரகமுவ மாகாணத்தில் வன்பந்து (Hard Ball) கிரிக்கெட் குழு உள்ள ஒரே ஒரு முஸ்லிம் பாடசாலை எமது பாடசாலையாகும்.

மேலும், 2010ம் ஆண்டு சப்ரகமுவ பாடசா லைகளில் காணப்படும் தகவல் தொழில்நுட்ப கணினி அறைகளுக்கிடையிலான போட்டியில் (EXELLANT ICT COMPETITION) பங்குபற்றி முதலாமிடத்தை சுவீகரித்துக் கொண்டதுடன் இருபது இலட்சம் ரூபா பெறுமதியான கணினி உபகரணங்களும் பரிசாகக் கிடைக்கப்பெற உள்ளது. அத்துடன் அகில இலங்கைப் போட்டிக்கும் தெரிவாகி உள்ளது

அரசாங்கத்தின் 1000 பாடசாலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் எமது பாடசாலையும் சேர்த்துக் கொள்ளப்பட்டிருப்பது இன்னுமொரு முக்கிய விட யமாகும்.



அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற மனையியல் போட்டியில் இரண்டாமிடத்தைப் பெற்ற மாணவி எம்.என். சர்மிலாவுக்கு முதலமைச்சர் மஹீபால ஹேரத் நினைவுச் சின்னத்தை வழங்கி வைக்கிறார்.

அண்மையில் உயர்தர விஞ்ஞான, வர்த்தக, கலைப் பிரிவின் கல்வி அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு பழைய மாணவர்களின் ஒத்துழைப்புடன் மேலதிக வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.


இவ்வாறு ஹெம்மாதகம அல்அஸ்ஹர் நவோத் யப் பாடசாலை பலதுறைகளிலும் முன்னேற்றப் பாதையில் செல்வதற்கு அல்லாஹ்வின் உதவியால் இரவு, பகல் பாராது உழைக்க்கும் அதிபருடன் இங் குள்ள பிரதி அதிபர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், ஆசிரிய குழாம் மற்றும் பழைய மாணவர் சங்கம், கல்விக் காரியாலய அதிகாரிகள், பிரதேசத்தி லுள்ள அரசியல்வாதிகள், தனவந்தர்களின் ஒத்து ழைப்பும் காரணமாக இருக்கின்றது.■


## பாடசாலை அதிபர்களும் அவர்கள் சேவையாற்றிய காலப் பகுதியும்

| | | | |
|---|---|---|---|
| 1. Mr. P.U. Suwamipillai | 1917.03.25 – 1928.10.15 | 2. Mr.A. Noor Mohamed | 1928.10.16 – 1933.01.09 |
| 3. V.P. Aarumuham | 1933.01.10 – 1934.05.02 | 4. Mr.K. Shinnaththambi | 1934.05.03 – 1935.07.02 |
| 5. Mr.K. Kathirkamaththambi | 1936.12.03 – 1939.09.30 | 6. Mr.N. Palaniththambi | 1939.10.01 – 1941.01.05 |
| 7. Mr.C. Wealuppillai | 1941.01.06 – 1944.08.21 | 8. Mr.K. Sivagnanam | 1944.08.22 – 1946.07.18 |
| 9. Mr.M.H.M. Rasheedu | 1946.07.19 – 1948.06.04 | 10. Mr.M.R. Mohamed | 1948.06.05 – 1951.04.30 |
| 11. Mr.M.S.M. Rasheed | 1951.05.01 – 1956.07.01 | 12. Mr. A.A.M. Samsudeen | 1956.07.02 – 1957.08.10 |
| 13. Mr.S.M.J. Udayar | 1957.08.11 – 1958.11.20 | 14. Mr.M.H.M. Rasheed | 1958.11.21 – 1961.04.20 |
| 15. Mr.M.H. Haja Ameer | 1962.02.16 – 1967.01.10 | 16. Mr.M.H. Rasheed | 1967.01.11 – 1970.07.23 |
| 17. Mr.S.M. Riyal | 1970.07.23 – 1970.09.10 | 18. Mr.D.L.M. Hanifa | 1970.09.11 – 1970.12.31 |
| 19. Mr.M.S.M. Razik | 1971.01.01 – 1971.08.01 | 20. Mr.M.S.A. Wahid | 1971.08.02 – 1977.09.26 |
| 21. Mr.S.M. Riyal | 1977.09.27 – 1978.01.15 | 22. Mr.Y.L.M. Wahab | 1978.01.16 – 1980.01.31 |
| 23. Mr.A.R.M. Nizar | 1980.02.01 – 1980.03.18 | 24. Mr.M.L.M. Makeen | 1980.03.19 – 1981.06.26 |
| 25. Mr.M.I.M. Shareef | 1981.06.21 – 1981.08.18 | 26. Mr.M.S.A. Haleem | 1981.08.19 – 1983.02.17 |
| 27. Mr.S.M. Riyal | 1983.02.18 – 1990.07.31 | 28. Mr.A.L.A.M. Iqbal | 1990.08.01 – 1990.12.31 |
| 29. Mr.A.C.M. Nisardeen | 1991.01.01 – 1991.06.19 | 30. Mr.M.H.M. Yoosuflebbey | 1991.06.20 – 1991.11.10 |
| 31. Mr.A.W.M. Hussain | 1991.11.11 – 1993.04.26 | 32. Mr.M.J.M. Nayeemudeen | 1993.04.27 – 2002.04.18 |
| 33. Mr.M.H.M. Yoosuflebbay | 2002.04.19 – 2002.05.17 | 34. Mr.A.C.M. Azhar | 2002.05.18 – 2004.10.24 |
| 35. Mr.M.I.M. Junaid | 2004.10.25 – 2006.06.01 | 36. Mr.M.A.M. Nisthar | 2006.06.02- இன்று வரை |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்கள் சாதனை படைக்க





# புத்தாக்கத் திறன்

## (Creative Thinking Skill)

ஜே.எம். அஸீம்

விஞ்ஞானிகளின் விவேகமான சிந்தனைத் திறனே புதிய பல கண்டுபிடிப்புகளுக்கு வழியமைத்தது. உலகமே காலத்தைப் பற்றிய ஒரு கருத்தைக் கொண்டிருந்தபோது ஐன்ஸ்டீன் காலத்தைப் பற்றிய புதிய கருத்தை வெளியிட்டார். காலம் போற்றும் விஞ்ஞானியானார். சார்ள்ஸ் பபேஜ், கணித்தலின் இலகுபடுத்தலுக்கு கணினியைக் கண்டுபிடித்தார். இவர்களுக்குள் இருக்கும் சிந்தனைத் திறன் இவர்களை உலகிற்கு அறிமுகப்படுத்தியது.

விஞ்ஞானிகள் மாத்திரம் புத்தாக்கம் படைத்துக் கொண்டிருந்த நிலைமாறி இன்று எந்தத் துறையில் உள்ளவரும் தனது புத்தாக்கத் திறனை வெளியிடுவதற்கான வழியை உலகம் திறந்தே வைத்துள்ளது. விளம்பரங்கள் இன்று புத்தாக்கத் திறனை வெளிப்படுத்தும் சிறந்த ஊடகமாகக் காணப்படுகின்றன. அனைத்திலும் இன்று புதுமைகள் புகுத்தப்பட்டுக் கொண்டே வருகின்றன.

நாம் எவ்வாறு இத்தகைய புத்தாக்கத் திறனை வளர்த்துக் கொள்வது என்று நீங்கள் மனதிற்குள் கேள்வி எழுப்புவது உங்கள் புத்தாக்க ஆர்வத்தினை வெளிப்படுத்துகிறது. புதிதாக எதனையும் செய்ய வேண்டும்; வித்தியாசமாக எதனையும் செய்ய வேண்டும்; மற்றவர்களை ஈர்க்கும் வண்ணம் எதனையும் சாதிக்க வேண்டும் என்று நினைக்கும் உங்களுக்கும் இது சாத்தியமானதே.

பறவைகளைப் போல் பறக்க நினைத்தவர்கள் தான் விமானங்களுக்கு முன்னோடியாக அமைந்தனர். புத்தாக்க சிந்தனையோடு அமைந்த தாஜ்மஹால்தான் உலக மக்களின் கவனத்தை ஈர்த்தது. இன்று கட்டட நிர்மாணத் துறையில் புத்தாக்க சிந்தனைகள் புகுந்து நாம் வியந்து நிற்கும் பல புதிய கட்டடங்களைக் காட்சிப்படுத்திக் கொண்டிருக்கின்றன. எங்கும் புதுமை எதிலும் புதுமை என உலகம் மாறி விட்டது.

### மாணவர்களும் புத்தாக்கத் திறனும்

பாடசாலைகளில் மாணவர்கள் மத்தியில் புத்தாக்கத்திறன் தொடர்பான போட்டிகள் நடைபெற்று வெற்றி பெற்ற மாணவர்கள் பாராட்டப்படுகின்றனர். அதேவேளை புத்தாக்கத்திறன் என்றால் என்ன என்றே தெரியாத மாணவர்களும் இருக்கிறார்கள்.

தோமஸ் அல்வா எடிசன் பள்ளிக் காலங்களில் முட்டைக்கு மேல் அமர்ந்து அடைகாத்ததாகக் கூறப்படுகிறது. குறும்புத்தனமான பிள்ளையாக பள்ளிக் காலத்தைக் கழித்த அவர், வாழ்க்கையை வீணாகக் கழித்துவிடவில்லை. புதிதாகத் தேடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னார்; ஆராய்ந்தார். ஆயிரக்கணக்கான கண்டு பிடிப்புக்களின் சொந்தக்காரரானார்.

இப்படித்தான் எமக்குள்ளும் பல புத்தாக்கத் திறமைகள், ஆற்றல்கள் மறைந்திருக்கின்றன. நாம் அவற்றை வெளிக் கொண்டு வர வேண்டும்.

**சிந்தனையும் இயற்கையும்**

அல்குர்ஆன் மனிதன் எவ்வாறு சிந்திக்க வேண்டும் என்று கற்றுத் தருகிறது.

“அவன் வானங்களையும் பூமியையும் படைத் திருப்பதிலும் இரவு, பகல் மாறி மாறி வருவதிலும் மனிதர்களுக்குப் பயன் தருவதை (ஏற்றிக்) கொண்டு சமுத்திரத்தில் செல்லும் கப்பலிலும் (வரண்டு) இறந்த பூமியை உயிர்ப்பி(த்துச் செழிப்பாக்கி வை)க்க வானத்திலிருந்து அல்லாஹ் பொழிவிக்கச் செய்யும் மழையிலும் எல்லாவித கால்நடைகளையும் பூமி யில் பரவ விட்டிருப்பதிலும் (மனிதர்களுக்குள்ள நன்மைகளை ஆராய்ந்து) சிந்திக்கும் மக்களுக்கு நிச்சயமாக சான்றுகள் இருக்கின்றன.” (2:164)

“ஒட்டகம் எவ்வாறு படைக்கப்பட்டுள்ளது என்றும் வானம் எவ்வாறு உயர்த்தப்பட்டிருக்கிறது என்றும் மலைகள் எவ்வாறு நடப்பட்டிருக்கின்றன என்றும் பூமி எவ்வாறு விரிக்கப்பட்டிருக்கின்றது என்றும் அவர்கள் சிந்திக்க வேண்டாமா?” (88: 17-20)

சிந்தித்தல் தொடர்பாக அல்குர்ஆனின் போதனைகளும் வழிகாட்டல்களும் ஏராளமாக உள்ளன. எவ்வாறு சிந்திக்க வேண்டும் என்பதற் கான அருமையான வழிகாட்டலை அல்குர்ஆன் எமக்கு கற்றுத் தருகிறது.

உங்களைச் சுற்றியுள்ள இயற்கையைப் பார்த்து சிந்தியுங்கள். நீங்கள் காணும் பறவைகள், காலையில் உதிக்கும் சூரியன், அந்தி நேரம் அஸ்தமிக்கும் ஆதவன், கம்பீரமாகக் காட்சிய ளிக்கும் மலைகள், சலசலத்து ஓடும் அருவிகள், சாலையோர மரங்கள், மாலைநேர செவ்வானம், குளிர்மை தரும் சந்திரன்... இவை உங்கள் சிந்தனைக்கு விருந்தாக அமைய வேண்டும்.

அல்குர்ஆன் கற்றுத் தரும் சிந்தனை முறைதான் வினாக்களைத் தொடுத்து சிந்திப்பது.

வானம் எவ்வாறு உயர்த்தப்பட்டுள்ளது?

பூமி எவ்வாறு விரிக்கப்பட்டுள்ளது?

பறவைகள் எவ்வாறு பறக்கின்றன?

மீன்கள் எவ்வாறு நீந்துகின்றன?

சிந்தனையை மாற்றி சிந்தியுங்கள்

புத்தாக்கம் என்பதை சிலர் ஒரு புதிய ஆக்கம் மட்டும் என தவறாக அர்த்தம் கொள்கின்றனர். உள்ள ஒன்றை மனிதர்களுக்கு உதவுவதாகவும் சௌகரியமாகவும் உகந்ததாகவும் இழப்பைக் குறைத்து செய்வதுமே புத்தாக்கம். அது சிந்தனையாக, புதிய திட்டமாக, நுட்பமான ஆலோசனையாக, புதிய உருவாக்கமாக, மாற்று யோசனை யாக எவ்வாறும் இருக்கலாம். புதிதாக ஒன்றை செய்வது மட்டும் புத்தாக்கமல்ல. புதிய அருமையான ஆலோசனைகள் வழங்குவதும் புத்தாக்க சிந்தனையே.

அப்பிள் ஏன் கீழே விழ வேண்டும்; ஏன் மேலே செல்லவில்லை? போன்ற கேள்விகள் பூமி யில் புதைந்திருந்த புவியீர்ப்பு விசையை உலகறி யச் செய்தன. நியூட்டனின் கேள்வி, விடை தேடிச் சென்ற பயணம் சாதனை புரிந்தது.

ஹிஜ்ரத்- மக்காவிலிருந்து மதீனாவுக்கு செல்ல வேண்டும். வழிநெடுகிலும் தடைகள். மாற்று வழியைத் தெரிவு செய்கிறார்கள் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள். அற்புதமான யோசனை, அருமையான திட்டம் தயாராகிறது. உலகமே வியந்து பார்த்த ஹிஜ்ரத் திட்டமிடலாக அது மாறுகிறது.

**புத்தாக்கம்**

புத்தாக்கம் என்பதை சிலர் ஒரு புதிய ஆக்கம் மட்டும் என தவறாக அர்த்தம் கொள்கின்றனர். உள்ள ஒன்றை மனிதர்களுக்கு உதவுவதாகவும் சௌகரியமாகவும் உகந்ததாகவும் இழப்பைக் குறைத்து செய்வதுமே புத்தாக்கம். அது சிந்தனை யாக, புதிய திட்டமாக, நுட்பமான ஆலோசனை யாக, புதிய உருவாக்கமாக, மாற்று யோசனை யாக எவ்வாறும் இருக்கலாம். புதிதாக ஒன்றை செய்வது மட்டும் புத்தாக்கமல்ல. புதிய அருமை யான ஆலோசனைகள் வழங்குவதும் புத்தாக்க சிந்தனையே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிந்தனை; மாற்றத்தின் அடிப்படை**

புத்தாக்க சிந்தனை மாற்றத்தின் அடிப்படையாக இருக்க வேண்டும். சிந்தனையால் நல்ல மாற்றங்கள் வர வேண்டும். சிந்தனை வஹியின் ஒளியோடு இணைகின்றபோதுதான் சீரிய சிந்தனை உருவாகும். இல்லாவிட்டால் சீரழிந்த சிந்தைகளே எஞ்சும். மனிதன் சிந்திக்க வேண்டும். ஆனால் அவனின் சிந்தனை ஆற்றல் மட்டுப்படுத்தப்பட்டது. எனவே, அவன் வஹியின் வழிகாட்டலில் இருந்தே சிந்திக்க வேண்டும். இல்லாவிட்டால் சிந்தனைகள் வழிதவறி விடும்.

**கல்வி நடவடிக்கைகள், கற்றல் செயற்பாடுகளில் புத்தாக்க சிந்தனைகள்**

மாணவர்களது சூழல் கல்விச் சூழலே. எனவே, கல்விசார் செயற்பாடுகளை மாணவர்கள் புத்தாக்கமாக அமைத்துக் கொள்வது நடைமுறைச் சாத்தியம் கூடியது. தமது கல்வியில் கற்றலில் புதுமை புகுத்துவது, தான் கற்ற விடயங்கள் தொடர்பாக சிந்தித்து அதில் புதுமை படைப்பது போன்ற புதிய முயற்சிகளில் மாணவர்கள் ஈடுபடலாம். விஞ்ஞனப் பாடத்தில் கற்ற ஒன்றை வீட்டில் வந்து சிந்தித்து புதிதாக ஒன்றைக் கண்டுபிடிக்க முயலலாம். கணிதப் பாடத்தில் புரியாத புதிர் ஒன்றிற்கு விடை தேட இலகுவான கணித்தல் நுட்பத்தை கண்டறியலாம். சூழல், சுற்றாடல், சுகாதாரம் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வை மக்கள் மனங்கவரும் விதமாக புதிதாக சிந்திக்கலாம்.

மாணவர் மன்றங்களை வித்தியாசமாக நடத்த சிந்திக்கலாம். பாடசாலையில் மாணவர்கள் விஞ்ஞான, கணித, தமிழ், ஆங்கிலக் கழகங்களை அமைத்து புத்தாக்க முயற்சிகளைத் தொடரலாம். உங்கள் பாடசாலையை புத்தாக்கங்களால் அலங்கரித்து புதுப் பொலிவுடன் காட்சி தரச் செய்யலாம். புத்தாக்கம் தொடர்பான விஷேட செயலமர்வுகளை ஏற்பாடு செய்து, துறைசார் வல்லுநர்களைக் கொண்டு நடத்தி மாணவர்களுக்கு உற்சாகம் வழங்கலாம்.

**புத்தாக்கம் ஒரு திறன் (Skill)**

புத்தாக்கத்தை ஒரு திறனாக எம்மிடம் வளர்த்துக் கொள்ள வேண்டும். நீங்கள் உங்கள் வாழ்க்கையில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு புதிய தீர்வுகளைத் தேடுங்கள். உங்கள் தேடல் நிச்சயம் வெற்றி பெறும். புதிய தீர்மானங்களை மேற்கொள்ளுங்கள். மனதிற்குப் புத்துணர்ச்சி அளியுங்கள்.

அப்பிள் (Apple) கம்பனியின் புத்தாக்கத் திறன் அவர்களை தனித்துவமாக திகழச் செய்கிறது. மைக்ரோசொப்டின் புத்தாக்கத் திறன் சாதனைகள் புரிந்து கொண்டிருக்கிறது. IBM, Dell, Nokia, Samsung போன்ற பல நிறுவனங்கள் புத்தாக்கத் திறனால் புதுமைகள் படைக்கின்றன. மக்களிடையே பெரிய வரவேற்பைப் பெற்றுள்ளன.

ஜப்பானியரின் புத்தாக்கத் திறனே அவர்களை குறுகிய காலத்தில் உலக மகா யுத்த அழிவிலிருந்து மீட்டெடுத்து துரிதமாக முன்னேறச் செய்தது. அவர்களின் புத்தாக்கத் திறன் உலகின் முன்னணி நிறுவனங்களின் சொந்தக்காரர்களாக அவர்களை மாற்றியது.

**மொழியும் புத்தாக்கத் திறனும்**

பொதுவாக உலகில் பல மொழிகள் இடமிருந்து வலமாகத்தான் எழுதப்படுகின்றன. ஆனால், அரபு மொழி வலமிருந்து இடமாகவும் ஜப்பானிய மொழி மேலிருந்து கீழாகவும் எழுதப்படுகின்றது. ஒருவர் பேசும், எழுதும் மொழிக்கும் அவரது சிந்தனைத் திறனுக்கும் தொடர்புள்ளதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

அமெரிக்காவில் ஆசிரியையாகப் பணிபுரிந்த ஒரு பெண்மணியின் கனவு உலகின் கோடீஸ்வரப் பெண்மணியாக வர வேண்டும் என்பது. ஒரு ஆசிரியை எப்படி கோடீஸ்வரியாக வருவது என்ற ஏளனங்களே அவருக்கு மிஞ்சின. திடீரென ஒரு நாள் விபத்து ஒன்றில் காலை இழந்து சக்கர நாற்காலியில் அமர்ந்தார் அவர். கனவு கலையவில்லை. என் உடல்தான் ஊனம், உள்ளமல்ல என்று தனது இலட்சியத்தில் உறுதியாக இருந்தார் அவர். நாட்கள் செல்லச் செல்ல நாற்காலி சுமையானது. வசதியில்லாத அசௌகரியமான நாற்காலியாக அது தென்படவே, அதனை தன்னைப் போல் கஷ்டப்படுபவர்களுக்கு வசதியாக எப்படி மாற்றுவது என்று சிந்தித்தார். விளைவு வசதியான சக்கர நாற்காலி உருவானது. மக்களிடையே அபிப்பிராயத்திற்காக வெள்ளோட்டம் விட்டார். இலேசான வரவேற்புக் கிடைத்தது. தனியாக ஒரு நிறுவனத்தை ஆரம்பித்தார். நாளடைவில் அமோக வரவேற்பைப் பெற்றது. கனவு நனவாகியது!

மாணவர்களாகிய நாமும் எமது தேவைகளை நிறைவு செய்ய மாற்று வழிகளைச் சிந்திக்கலாம். புதுமைகள் படைக்க முயலலாம். எமக்குப் பிடித்த பாடங்களில் புதிய முயற்சிகளைத் தொடரலாம். புத்தாக்கத்தால் எமது வேலைகளை, எமது சூழலை குறிப்பாக எமது கற்றலை இலகுபடுத்தி பயன் நிறைந்ததாக ஆக்கலாம். ■


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஏ.எல்.ஏ. நிஸார் (Maths Trnd), B.A.Hons, Dip.in.Edu
ஆசிரியர், கிரி/மெத்தேகெடிய முஸ்லிம் வித்தியாலயம், கெகுணகொல்ல

# தொடைகள் SETS

- தொடைகள் என்பது வரையறுக்கப்பட்ட பகுதிக்குள் வருகின்ற பொருட் தொகுதிகளை அல்லது எண்களைத் தொகுத்துக் குறிப்பதாகும்.
- இதனை வென்வரிப்படம் அல்லது இரட்டை அடைப்பின் மூலம் தொகுத்துரைக்கலாம்
- தொடையில் வரும் உறுப்புக்கள் 'மூலகம்' எனப்படும்
- தொடைகளில் பெயரைக் குறிப்பிட ஆங்கில பெரிய எழுத்துக்கள் (Capital letters) பயன்படுத்தப்படும்

A = { 2,4,6,8,10 }
B = { கரட், பீட்ரூட், போஞ்சி, வெண்டி }
X = { உங்கள் குடும்ப உறுப்பினர்கள் }

- இதனை பின்வருமாறு வென்வரிப்படத்திலும் காட்டலாம்.
- தொடையொன்றை அமைக்கும்போது ஒரு








எழுத்து அல்லது ஒரு இலக்கம் ஒரு முறை மட்டுமே எழுதப்படல் வேண்டும்.

உதாரணம்: COLOMBO என்ற சொல்லிலுள்ள ஆங்கில எழுத்துக்களை தொடையொன்றில் எழுதிக் காட்டினால்...

A = { C,O,L,M,B, }




தொடையிலுள்ள உறுப்புக்களான மூலகங்களை '$\varepsilon$' என்ற குறியீட்டாலும் மூலகம் அல்ல என்பதை - $\notin$ என்ற குறியீட்டாலும் அடையாளப்படுத்த வேண்டும்.


உதாரணம்: M = { 10,11,12,13,14,15,16 }

i. 11 தொடை M இன் ஒரு மூலகம் என்பது
$11 \in M$ or $M \in 11$ குறிக்கப்படும்

ii. 25 தொடை $M$ இன் மூலகம் அன்று என்பது
$25 \notin M$ or $M \notin 25$ குறிக்கப்படும்

- தொடை ஒன்றின் முதலிமை / மூலகங்களின் எண்ணிக்கையை $n(A), n(B)$ எனக் காட்டலாம்.

உதாரணம்: A = { 1க்கும் 15க்கும் இடைப்பட்ட ஒற்றை எண்கள் }




n(A) = 06

மூலகங்களின் எண்ணிக்கை குறிப்பிடப்படும்போது அடைப்புக்குறி இடக் கூடாது.

- தொடைகளின் இடைவெட்டும் ஒன்றிப்பும்

இரண்டு தொடைகளின் பொதுவான மூலகங்கள் இடைவெட்டு எனவும்

இரண்டு தொடைகளின் மூலகங்களை ஒன்று சேர்த்து ஒன்றிப்பு '$\cup$' எனவும் அழைக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணம்: $C = \{2,4,5,6,7,8,9\}$

$D = \{1,3,6,7,10\}$

$C \cap D = \{5,6,7\}$

$C \cup D = \{1,2,3,4,5,6,7,8,9,10\}$

■ **அகிலத் தொடை $\mathcal{E}$**

குறிப்பிட்ட தொடையிலுள்ள மூலகங்கள் யாவற்றையும் உள்ளடக்கும் தொடை அகிலத் தொடை எனக் குறிக்கப்படும்.

x = {முக்கோணிகள்}

y = {நாற்பக்கல்கள்}

z = {ஐங்கோணிகள்}


இங்கு x,y,z ஆகிய தொடைகளின் மூலகங்களை உள்ளடக்கிய தொடை $\mathcal{E}$ = {பல்கோணிகள்} எனப்படும்.

$\mathcal{E}$ ={15 இலும் குறைந்த நேர் இயற்கை எண்கள்}

$K = \{1,3,5,6,7\}$

$M = \{2,4,5,8,10,11\}$

$N = \{7,9,10\}$




■ **வெறுந்தொடை அல்லது சூனியத் தொடை**

தொடை ஒன்றில் ஒரு மூலகமும் வராத விடத்து அத்தொடை வெறுந்தொடை எனப்படும்.

உதாரணம்:

K = {1க்கும் 5க்கும் இடைப்பட்ட 7 இன் மடங்குகள் }

K = {      }

இதனை K = $\phi$ எனக் காட்டலாம்

■ **தொடைகளின்தொடைப் பிரிவு $\subset$**

ஒரு தொடையிலுள்ள மூலகங்கள் யாவும் இன்னொரு தொடையில் காணப்படு மாயின் ....

உதாரணம்: $X = \{1,2,3,4,5,6,7\}$

$y = \{2,3,5\}$

இங்கு x ன் ஒரு தொடைப்பிரிவு y ஆகும். இதனை $x \supset y$ or $x \subset y$ எனக் குறிக்க வேண்டும்.

ஒரு தொடையின் மூலகங்கள் அதே தொடையின் தொடைப் பிரிவாகக் கருதப்படும்.

உதாரணம்: L = {a ,b}

L இன் தொடைப் பிரிவுகள்

{a} , {b}, {a,b}, { }

மூலகங்களின் எண்ணிக்கைக்கும் தொடைப் பிரிவுக்கும் இடையில் பின்வரும் தொடர்பு காணப்படும்.

| மூலகங்களின் எண்ணிக்கை | தொடைப் பிரிவுகளின் எண்ணிக்கை |
|---|---|
| 1 | 2 |
| 2 | 4 |
| 3 | 8 |
| 4 | 16 |
| 5 | 32 |

இதனை $2^n$ இனால் காட்டப்படும்

உதாரணம்:

128 தொடைப் பிரிவுகள் உள்ள தொடை ஒன்றின் மூலகங்களின் எண்ணிக்கை = 07

"ஒரு நாளின் ஒவ்வொரு மணித்தியாலத்திலும் வாழ்க்கை ஒரு செய்தியை அனுப்பிக் கொண்டேயிருக்கிறது. முஃமினே! நீ கழித்த மணித்தியாலங்களை சரியாகப் பயன்படுத்தியிருந்தால் தொடர்ந்து வரும் மணித்தியாலங்களையும் அப்படியே கழிக்க முயற்சி செய். நீ அதில் தவறுவிட்டிருந்தால் இன்னுமொரு மணித்தியாலத்தைப் பயன்படுத்தி அந்த மணித்தியாலத்தின் தவறை அழித்து விடு."

**இமாம் ஷாபிஈ (றஹிமஹுல்லாஹ்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேடுகள்

சேடுகள் தொடர்பான கூட்டல், கழித்தல், பெருக்கல், பிரித்தல் செய்கைகள் பல்வேறு வித மாக வினாக்களில் அமைவதைப் பார்த்திருப் பீர்கள்.

சேடுகள் பற்றிய அடிப்படை அறிவு

*1,,4,9,16...* எனும் தொடர் சதுர எண்களைக் காட்டுகின்றது என்பதை அறியலாம்.

சதுர எண்களின் வர்க்கமூலங்கள் முழு எண்களி னால் ஆனவை.

உதாரணம்

$$1^2 = 1;\ \sqrt{1} = 1$$

$$2^2 = 4;\ \sqrt{4} = 2$$

$$3^2 = 9;\ \sqrt{9} = 3$$

$$\square = \ ;\quad \square = 4$$

$$\square = \ ;\quad \square = 5$$

$$\square = \ ;\quad \square = 6$$

இங்கே கூடுகளை நிரப்புவது உங்களுக்கு இலகுவானதாக இருக்கும்.

ஆனால், $\sqrt{3}, \sqrt{5}, \sqrt{6}$ எனும் பெறுமானங்கள் முழு எண்களாக அமையாது என்பது வெளிப் படை. இவ்வாறு எழுதப்படுபவற்றை நாம் சேடு கள் என்கிறோம்.

$\sqrt{18}, \sqrt{48}, \sqrt{1000}$ போன்றவற்றை நாம் சற்று வேறு விதமாகவும் காட்டலாம்.

*18, 48, 1000* போன்ற எண்கள் பின்வருமாறு உள்ளதை அவதானியுங்கள்

$$18 = 9 \times 2$$

$$48 = 16 \times 3$$

$$1000 = 100 \times 10$$

*9,16,100* என்பன சதுர எண்களாகும்.

ஆகவே,

$\sqrt{18} = \sqrt{9 \times 2} = \sqrt{9} \times \sqrt{2} = 3 \times \sqrt{2} = 3\sqrt{2}$ எனவும்

$\sqrt{48} = \sqrt{16 \times 3} = \sqrt{16} \times \sqrt{3} = 4 \times \sqrt{3} = 4\sqrt{3}$ எனவும்

$\sqrt{1000} = \sqrt{100 \times 10} = \sqrt{100} \times \sqrt{10} = 10 \times \sqrt{10} = 10\sqrt{10}$

எனவும் எழுதலாம்.


$x \times \sqrt{x}$ என்பதை $x\sqrt{x}$ எனக் காட்டலாம்.

### சேடுகளின் பிரயோகம்

5cm பக்கமுள்ள சமபக்க முக்கோணி ஒன்றின் உச்சியிலிருந்து எதிர்ப்பக்கத்துக்கு வரையப்படும் செங்குத்தின் நீளத்தை சேடு வடிவில் தருக.

சமபக்க முக்கோணி

உரு *1*




இவ்வுருவை வரையுங்கள். ஒருங்கிசைவுகள் மூலம் $BD = CD$ என அறியலாம்.

∴ $BD = CD = \frac{5}{2}$

பைதகரஸ் தேற்றத்தின்படி, செங்கோண முக்கோணி ஒன்றின் செம்பக்கத்தின் வர்க்கம் மற்றைய இரு பக்கங்களின் வர்க்கங்களின் கூட்டுத் தொகைக்கு சமனாகும்.

∴ $\triangle ACD$ இல் $AC^2 = AD^2 + CD^2$ ($AD$ ஐ $x$ என்க)

$$5^2 = x^2 + \left(\frac{5}{2}\right)^2$$

$$\left(x^2 + \frac{15}{2}\right)^2 = 5^2$$

$$\therefore\ x^2 = 25 - \frac{25}{4}$$

$$x^2 = 5^2 - \left(\frac{5}{2}\right)^2$$




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

$$x^2 = \frac{100-25}{4}$$

$$x^2 = \frac{75}{4}$$

$$\therefore \quad x = \sqrt{\frac{75}{4}}$$

$$= \sqrt{\frac{25\times3}{4}}$$

$$= \frac{5\sqrt{3}}{2}$$

இவ்வாறு விடையைப் பெற்றபின் வினாவில் $\sqrt{3}$ இன் பெறுமானம் 1.732 என தரப்படின்,

$$x = \frac{5\times1.732}{2}$$

$=5\times0.866$

$=4.330$ என விடையை எழுதலாம்.

**கூட்டல், கழித்தல்**

$$\sqrt{x} + \sqrt{x} = 2\sqrt{2}$$

$$\sqrt{2} + \sqrt{2} = 2\sqrt{2}$$

$$5\sqrt{x} + 3\sqrt{x} - \sqrt{x} = 8\sqrt{x} - \sqrt{x}$$

$$=7\sqrt{x}$$

இவை இலகுவானவை.

**காரணிகளாக எழுதக் கூடியவை**

$x\sqrt{a}+2\sqrt{a}+y\sqrt{a}$ என்பதை அவதானியுங்கள். இங்கு $\sqrt{a}(x+2+y)$ எனும் விதமாக காரணி வடிவில் எழுதலாம்.

**சுருக்குக**

உதாரணம்

$$\frac{a\sqrt{2}+b\sqrt{2}+c\sqrt{2}}{a+b+c} = \frac{\sqrt{2}(a+b+c)}{a+b+c}$$

$$= \sqrt{2}$$

**பெருக்கல்**

$$4\sqrt{2}\times\sqrt{2} = 4\times2 \qquad (\sqrt{2}\times\sqrt{2}=2)$$

$$=8$$

$$\sqrt{a^3}\times\sqrt{a} = \sqrt{a\times a\times a}\times\sqrt{a}$$

$$= \underline{\sqrt{a}\times\sqrt{a}}\times\underline{\sqrt{a}\times\sqrt{a}}$$

$$= a\times a$$

$$= a^2$$

$$\sqrt{125}\times\sqrt{5} = \sqrt{5\times5\times5}\times\sqrt{5}$$

$$= \underline{\sqrt{5}\times\sqrt{5}}\times\underline{\sqrt{5}\times\sqrt{5}}$$

$$= 5\times5$$

$$= 25$$

எனவும் விடை பெறலாம்.

$2\sqrt{3}\times\sqrt{27}$ ஐக் காண்க

$$2\sqrt{3}\times\sqrt{27} = 2\sqrt{3}\times\sqrt{9\times3}$$

$$= 2\times\sqrt{3}\times\sqrt{9}\times\sqrt{3}$$

$$= 2\times\sqrt{\underline{3}}\times3\sqrt{\underline{3}} \qquad (\sqrt{3}\times\sqrt{3}=3)$$

$$= 2\times3\times3$$

$$= 18$$

மிக இலகு நடையில் இவ்வினாக்கள் அணுகப்பட்டிருக்கின்றன. எனினும், விரைவான பயிற்சி உள்ள மாணவர்கள் உடனடி விடைகளை பெறக் கூடும்.

கணிதப் புத்தக பயிற்சிகள் உங்களுக்கு இன்றியமையாதவை என்பதை மனதிற் கொள்ளுங்கள்.

> “மற்றவர்கள் உறங்கும்போது, நீங்கள் கட்டாயம் படிக்க வேண்டும். மற்றவர்கள் மகிழ்ச்சியாகப் பொழுதைக் கழிக்கும்போது நீங்கள் கருமமே கண்ணாயிருங்கள். மற்றவர்கள் வெறுமனே தங்கள் விருப்பத்தை வெளியிட்டுக் கொண்டிருக்கும்போது, அதை செயல்படுத்துவதற்கான வேலையை நீங்கள் தொடங்கி விடுங்கள்” **(வில்லியம் வாட்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஹனீபா ஏ. வஹாப் (இஸ்லாஹி)





# எமது பாடசாலை நிகழ்ச்சிகளைத் திட்டமிட்டு திறம்பட நடத்துவோம்

பாடசாலை வாழ்க்கை என்பது மாணவர்களுக்கு புத்தகக் கல்வியோடு பல அனுபவ அறிவுகளையும் வழங்குகின்றது. இப் பருவத்தில் மாணவர்களின் ஆளுமை விருத்திக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் பங்களிப்பு நல்குகின்ற பற்பல சந்தர்ப்பங்களை மாணவர்கள் சந்திக்கின்றனர். பாடசாலை வாழ்க்கையை முடித்துவிட்டு அடுத்த கட்டத்திற்குக் காலடி எடுத்து வைக்கவுள்ள மாணவர்களாகிய உங்களுக்கு சமூகத்தில் பல்வேறு நடிபங்குகளும் (Role play) பொறுப்புக்களை ஏற்றுச் செயற்பட வேண்டிய தேவையும் ஏற்படுகின்றது. இந் நடிபங்குகளையும் பொறுப்புக்களையும் ஏற்று அவற்றை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு முன்அனுபவம் முக்கியமானதாகும்.

இத்தகைய அனுபவங்களைப் பெற்றுக்கொள்ள களமமைக்கும் இடமாக பாடசாலைகள் திகழ்கின்றன. பாடசாலையில் கல்வியைத் தொடர்கின்ற மாணவன் வெறுமனே புத்தகக் கல்வியை மாத்திரம் கற்பதில்லை. மாறாக, பல்வேறு பொறுப்புக்களை ஏற்று அனுபவக் கல்வியையும் பெற்றுக் கொள்கிறான். இங்கு பொறுப்புக்களை ஏற்றுக்கொள்வதற்கு முன்வருகின்ற மாணவர்கள் எதிர்காலத்தில் தாம் வாழும் சமூகத்தில் பல பொறுப்புக்களைத் தயக்கமின்றிக் கையேற்கத் தங்களைத் தயார்படுத்திக் கொள்கின்றனர் என்பதில் சந்தேகமில்லை.

மாணவர்கள் பொறுப்பேற்று நடத்தக்கூடிய பல்வேறு நிகழ்ச்சிகள் பாடசாலைகளில் நடைபெறுகின்றன. உதாரணமாக மாணவர் மன்றம், கலை விழாக்கள், பரிசளிப்பு விழாக்கள், ஆசிரியர் தினக் கொண்டாட்டம், சிரமதான நிகழ்ச்சி மற்றும் இல்ல விளையாட்டுப் போட்டி நிகழ்ச்சிகள் போன்றவற்றைக் குறிப்பிடலாம். எந்தவொரு நிகழ்ச்சியாயினும் அதைச் சிறப்பாக நடத்தி முடிக்க திட்டமிடல் இன்றியமையாதது. 'குஞ்சுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA

கோழி என்றாலும் குனிந்து அறுக்க வேண்டும்' என்பது பழமொழி. சிறிய நிகழ்ச்சி என்றாலும் திட்டமிடல் அவசியம். எனவே, ஒரு நிகழ்ச்சியை எவ்வாறு திட்டமிடலாம் என்பதைப் பற்றி நோக்குவோம்.

ஒரு நிகழ்ச்சியைத் திட்டமிடுவதற்குப் பின்வரும் வினாக்கள் அடிப்படையாக அமைகின்றன. இவ்வினாக்களுக்கான விடைகள் குறிப்பிட்ட நிகழ்ச்சியைத் திட்டமிடுவதற்கு அவசியமான விடயங்கள் எவை என்பதைத் தீர்மானிப்பதற்கு உதவி செய்கின்றன.

1. நிகழ்ச்சியின் நோக்கம் என்ன?
2. என்ன வகையான நிகழ்ச்சி?
3. பார்வையாளர்கள் யார்? அண்ணளவாக எத்தனை பேர்?
4. நிகழ்ச்சியில் பங்குபற்றுபவர்கள் யார்?
5. பிரதம அதிதி மற்றும் கௌரவ அதிதிகளாக யாரை அழைப்பது?
6. நிகழ்ச்சி என்ன திகதியில், எங்கு நடைபெறும்?
7. நிகழ்ச்சியை விளம்பரப்படுத்தும் வழிவகைகள் என்ன?
8. உணவு மற்றும் குடிபானங்கள் ஏற்பாடு தேவையா?
9. நிகழ்ச்சியை நடத்துவதற்கு எவ்வளவு நிதி தேவைப்படும்?
10. தேவையான நிதி உதவியை எவ்வாறு பெறலாம்?

நிகழ்ச்சி ஒன்றைத் திட்டமிடுவதற்கான கூட்டமொன்றில் பின்வரும் வினாக்களை எழுப்பி அதற்காகப் பெறப்படும் விடைகளை அடிப்படையாகக் கொண்டு குறித்த நிகழ்ச்சியை வெற்றிகரமாகத் திட்டமிடலாம்.

ஒரு நிகழ்ச்சியைத் திட்டமிடுவதில் 4M என்ற முறைமையும் பயன்படுகிறது. அதனைப் பற்றி இம்முறை பார்ப்போம்.

1. M – Men
2. M – Materials
3. M – Minutes
4. M – Money

**நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மதீனாவுக்கு ஹிஜ்ரத் பயணம் மேற்கொண்டு தௌர் குகையில் இருந்த சந்தர்ப்பத்தில் உணவு கொண்டு வருவதற்காக அஸ்மா பின்த் அபீ பக்ர் (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களையும் தகவல்களைக் கொண்டு வருவதற்காக அபூ பக்ர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களின் மகனையும் நியமித்தார்கள்.**

1. Men (**மனித வளம்**)



ஒரு நிகழ்ச்சியை நடாத்தும்போது அங்கு பல்வேறு வேலைகள் காணப்படும். அவ் வேலைகள் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு பொருத்தமான மாணவர்களிடம் ஒப்படைக்கப் பட வேண்டும். தவறும்பட்சத்தில் திட்டமிட்ட ஒரு வேலையைக் குறிப்பிட்ட நேரத்தில் எதிர்பார்த்தளவு செய்து முடிக்க இயலாமல் போய்விடும். குறிப்பிட்ட ஒரு வேலை தாமதமடையும் என்றால் அது ஒட்டுமொத்த நிகழ்ச்சியையும் பாதித்துவிடும். எனவே, எவ்வேலைக்கு யார் பொருத்தம் என்பதை இனங்கண்டு அவரிடம் அவ்வேலையை ஒப்படைக்க வேண்டும்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மதீனாவுக்கு ஹிஜ்ரத் பயணம் மேற்கொண்டு தௌர் குகையில் இருந்த சந்தர்ப்பத்தில் உணவு கொண்டு வருவதற்காக அஸ்மா பின்த் அபீ பக்ர் (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களையும் தகவல்களைக் கொண்டு வருவதற்காக அபூ பக்ர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களின் மகனையும் நியமித்தார்கள். மேலும் தனது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயண வழிகாட்டியாக 'உரைகத்' என்பவரை தேர்ந்தெடுத்தார்கள். அவர் மதீனா நோக்கி பயணிக்கத் தேர்ந்தெடுத்த பாதை தொடர்பாக நன்கு அறிந்திருந்தார். மேலும் கிறிஸ்தவராக இருந்தபோதும் நம்பிக்கைக்குரியவராகக் காணப்பட்டார்.

இவ்வாறு ஹிஜ்ரத் நிகழ்வுக்கு ஒவ்வொருவரையும் தெரிவு செய்து நியமித்தமையானது ஒரு வேலையையைக் கச்சிதமாகச் செய்து முடிக்க மனித வளத்தை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதற்கு நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் வரலாறு நமக்குப் புகட்டும் பாடமாகும்.

மாறாக, பொருத்தமற்ற ஒரு மாணவனை குறித்த வேலை ஒன்றுக்கு நியமித்து அவ்வேலை உரிய நேரத்தில் ஒழுங்காக நடைபெறாமல் இருப்பதைக் கண்டு தலையில் கை வைப்பதில் எவ்விதப் பயனுமில்லை.

2. Materials **(நிகழ்ச்சியை நடத்துவதற்கு அவசியமான பொருட்கள்)**



திட்டமிட்ட ஒரு நிகழ்ச்சியை செவ்வனே நிகழ்த்தி முடிப்பதற்குத் தேவையான பொருட்களைப் பட்டியலிட்டு அவற்றை முற்கூட்டியே சேகரித்துக் கொள்ள வேண்டும். மாறாக, நிகழ்ச்சி ஆரம்பமாக ஓரிரு நிமிடங்கள் இருக்கும்போது, அதைக் காணவில்லை, இதைக் காணவில்லை என்று தட்டுத் தடுமாறுவது பயனற்றதோடு நிகழ்ச்சி ஒழுங்கமைப்பையும் பாதிப்பதாக அமைந்து விடலாம்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ஹிஜ்ரத் செய்ய இருப்பதை அபூபக்ர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களிடம் சுமார் நான்கு மாதங்களுக்கு முன்பே கூறி வைத்தார்கள். அன்றிலிருந்தே அபூ பக்ர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் 2 ஒட்டகங்களை மூங்கில் குலைகளைக் கொடுத்து வளர்த்து வந்தார்கள் என ஆஇஷா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்கள் அறிவித்துள்ளதாக ஸஹீஹுல் புகாரியில் பதிவா கியுள்ளது.


நிகழ்ச்சிகளின் வகைகளுக்கேற்ப தேவைப்படும் பொருட்களும் வித்தியாசப்படலாம். எனவே தேவையான பொருட்கள் என்ன என்பதைப் பட்டியலிட்டு முற்கூட்டியே சேகரித்துக் கொள்ள வேண்டும்.

3. Minutes **(நேரம்)**




சமகாலத்தில் முக்கிய பேசுபொருள்களாகக் காணப்படுகின்ற விடயங்களுள் நேர முகாமைத்துவமும் ஒன்றாகும். ஏலவே சுட்டிக்காட்டியது போல் ஒரு வேலையைச் செய்து முடிப்பதற்கு மனித வளம் முக்கியமானதாகும். குறித்த ஒரு வேலையைப் பொறுப்பெடுத்த ஒரு மாணவன் நேரத்திற் குச் சமுகமளிக்காவிட்டால் முழு வேலையும் நாசமாகிவிடும். குறித்த நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற நேர முகாமைத்துவமும் மாணவர்களின் அர்ப்பணிப்பும் இன்றியமையாததாகும்.

4. Money **(பணம்)**



எந்தவொரு காரியமாயினும் பணம் அத்தியவசியமான தேவையாகும். திட்டமிடப்பட்ட எத்தனையோ காரியங்கள் போதிய பணமில்லாமல் நடைபெறாமல் போகின்றன. இருந்த போதிலும் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக உதவுவதற்கு எத்தனையோ தனவந்தர்களும் நிறுவனங்களும் சமூகத்தில் காணப்படுகின்றனர். உரியவர்களிடம் உரிய முறையில் நாடுகின்றபோது அவற்றைப் பெற்றுக் கொள்ள முடியும். பணத்தைத் திரட்டுவதற்கான வழிமுறைகளை ஆலோசித்து, தேவையான நிதியைத் திரட்டிக் கொள்ளுங்கள். நிகழ்ச்சியொன்றை வெற்றிகரமாக நடத்தி முடிக்க பணம் அத்தியவசியமானதாகும்.

மாணவர்களே! நாளை உங்களையும் பல பொறுப்புக்கள் தேடி வரலாம். பல நிகழ்ச்சிகளை முன் நின்று நடத்தும்படி நீங்கள் வேண்டப்படலாம். அப்பொறுப்புக்களை நிறைவேற்ற பாடசாலை வாழ்க்கையில் நீங்கள் பெறும் அனுபவங்கள் நிச்சயம் பக்க பலமாக இருக்குமென்பது வெள்ளிடை மலை. இரும்பையும் கரும்பாக மாற்றும் சக்தியைத் தம்மகத்தே கொண்ட நீங்கள் உங்களுடைய வளமான எதிர்காலத்திற்காக உங்கள் இளமையை, உங்கள் சக்தியை முதலீடு செய்யுங்கள். எதற்கும் தயங்காமல் வேலையைப் பொறுப்பெடுங்கள். இங்கு குறிப்பிடப்பட்ட விடயங்களை மனதிற்கொண்டு அனுபவமிக்க ஆசிரியர்களின் ஆலோசனையின் அடிப்படையில் காரியமாற்றக் களமிறங்குங்கள். நாளைய வெற்றியாளர்கள் நீங்கள்தான் என்பதில் கிஞ்சிற்றும் சந்தேகமில்லை, இன்ஷா அல்லாஹ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஞ்ஞானம் 10, 11
தர மாணவர்களுக்கானது

ஆசிரியர்: ஹாஜிமா ஜெஸீமா ஆதம் லெவ்வை (Bsc, C.P.O retired)
தேசிய கல்வி நிறுவகம்

**தேர்ச்சி 2.0 - அங்கியின் உடலின் ஒருங்கமைப்பு மட்டம்**
**தேர்ச்சி மட்டம் 2.2 - இழையங்களின் பல்வகைமை**

## பல்தேர்வு வினாக்கள்

01. இழையம் எனப்படுவது
 i. உயிருள்ள கலங்களின் கூட்டம்
 ii. ஒத்த கலங்களும் குறித்த தொழில்களைச் செய்யும் கலங்களும்
 iii. தோற்றம், வளர்ச்சியில் ஒத்த, குறித்த தொழில்களைப் புரிவன
 iv. ஒரே தொழில் புரிகின்ற, உயிருள்ள சிறப்புக் கலங்கள்

02. உயிருள்ள கலங்கள் கொண்டு, தாங்கும் தொழிலைச் செய்கின்ற, அறுகோண வடிவக் கலங்கள் எவை?
 i. புடைக்கல இழையம்
 ii. ஒட்டுக்கல இழையம்
 iii. வல்லருகுக்கல இழையம்
 iv. குழல்போலி இழையம்

03. நீர், கனியுப்பு கடத்தலில் பங்குபெறும் இழையம் எது?
 i. புடைக்கல இழையம்
 ii. ஒட்டுக்கல இழையம்
 iii. காழ்கலனி இழையம்
 iv. உரிய இழையம்

04. இலையிலிருந்து ஏனைய பகுதிகளுக்கு எவ்விழையத்தினூடாகப் பதார்த்தங்கள் செலுத்தப்படுகின்றன?
 i. புடைக்கல இழையம்
 ii. வல்லருகுக்கல இழையம்
 iii. காழ்கலனி இழையம்
 iv. உரிய இழையம்

05. தடித்த இலிக்கினின் படிவு கொண்ட இறந்த கலங்கள் கொண்ட இழையம் எது?
 i. வல்லருகுக்கல இழையம்
 ii. ஒட்டுருகுக்கல இழையம்
 iii. தோழமைக் கலங்கள்
 iv. ஒட்டுக்கல இழையம்

06. கடத்தலுக்கு உதவும் பிரதான இழையம்
 i. தசையிழையம் ii. நாரிழையம்
 iii. குருதியிழையம் iv. மேலணியிழையம்

07. மழமழப்பான தசை காணப்படாத இடம்
 i. சிறுநீர்ப்பை ii. நாடிகள்
 iii. நாக்கு iv. உணவுக் கால்வாய்


08. குறித்த அங்கத்தில் மட்டும் காணப்படும் கிளைகளுள்ள தசை
 i. இரைப்பைத் தசை ii. இதயத் தசை
 iii. வன்கூட்டுத் தசை iv. கழுத்துத் தசை

09. இச்சையின்றி இயங்கும் தசைகள்
 i. இதயத் தசையும் மழமழப்பான தசையும்
 ii. இதயத் தசையும் வன்கூட்டுத் தசையும்
 iii. மழமழப்பான தசையும் வன்கூட்டுத் தசையும்
 iv. இதயத் தசை மட்டும்

10. பல் கருக கொண்ட, வரி கொண்ட அமைப்புடைய இழையம் காணப்படும் இடம்
 i. உணவுக் குழாய் ii. புயம்
 iii. ஈரல் iv. சிறுநீர்ப்பை

## கட்டமைப்பு வினாக்கள்

01. அ. பின்வரும் பெருட்களில் காணப்படும் பிரதான இழைய வகைகளைக் குறிப்பிடுங்கள்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

i. இளம் தண்டு    ii. தேங்காய்ச் சிரட்டை
iii. கிழங்குத் துண்டு    iv. இலைத் துண்டு
v. இலை நரம்பு

ஆ. படத்தில் காட்டப்பட்ட இழைய வகைகளை இனம் காணுங்கள்.

இ. உரிய இழையத்தில் காணக்கூடிய கலவைக ளைப் பெயரிடுங்கள்.

ஈ. வலிமையான வல்லுருக் கலங்களை 3ஆக வகைப்படுத்தலாம். அவற்றைக் குறிப்பிடுங்கள்.

உ. தாவர இழையங்களைப் பிரதானமாக இரண்டு பிரிவுக்குள் அடக்கலாம். அவ்விரு பிரிவு களையும் குறிப்பிடுங்கள்.

### அமைப்புக் கட்டுரை

02. அ. பின்வரும் அங்கங்களில் காணப்படுகின்ற பிரதான இழைய வகைகளைக் குறிப்பி டுங்கள்.

i. தோல்    ii. சிறுநீர்ப்பை    iii. கண் நரம்பு
iv. தொடை    v. கை என்பு

ஆ. மூன்று வகையான குருதிக் கலங்களையும் அவற்றின் தொழில்களையும் குறிப்பிடுங் கள்.

இ. இச்சையுள் தசையைக் குறிப்பிட்டு, அதன் சிறப்பியல்பை எழுதுங்கள்.

ஈ. உடலில் களைப்படையாமல் தொடர்ந்து தொழிற்படும் தசையிழைம் யாது? அதன் அமைப்பைப் படம் வரைந்து குறியுங்கள்.

உ. உரிய இழையத்தை குருதி இழையத்துடன் ஒப்பிடுங்கள்.

| | உரியம் | குருதி |
|---|---|---|
| i. | | |
| ii. | | |
| iii. | | |

### கட்டுரை அமைப்பு வினாக்கள்

01. குருதி எவ்வாறான இழையம் எனக் குறிப் பிட்டு, உங்கள் நண்பருக்கு, அதன் கட்ட மைப்பை எவ்வாறு விளங்குவீர்களெனக் குறிப்பிடுங்கள்.

02. ஒரு பச்சையிலையின் கட்டமைப்பு, அதன் தொழிலைச் செய்வதற்கு ஏற்ற இழைய வகை களைக் கொண்டுள்ளதா என ஆராயுங்கள்.

## தேர்ச்சி மட்டம் 2.2 விடைகள்

### பல்தேர்வு வினாக்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1. iii | 2. ii | 3. iii | 4. iv | 5. i |
| 6. iv | 7. iii | 8. ii | 9. i | 10. ii |

### கட்டமைப்பு வினாக்கள்

01. அ.

i. இளம்தண்டு - புடைக்கல, ஒட்டருக்கல இழையம்

ii. தேங்காய்ச் சிரட்டை - வல்லருகுக் கலம்

iii. கிழங்கு - புடைக்கல இழையம், சேமிப்பி ழையம்

iv. இலை - புடைக்கல இழையம், மேல் தோல், லேலிக்கால், கடற்பஞ்சு

v. இலை நரம்பு - உரியம், காழ்

ஆ.

a. ஒட்டருகுக் கலம்

b. புடைக்கலம் - லேலிக்கால் கலம் அல்லது பச்சைய இழையம்

c. நார்    d) காழ்    e) உரியம்

இ. i. நெய்யரிக் கலம்    ii. தோழமைக் கலம்
iii. உரிய நார்    iv. உரிய புடைக்கலம்
v. வல்லருகுக் கலம்

ஈ. வல்லருகு - i. கற்கலம்    ii. நார்கலம்
iii. வல்லுருக்கலம்

உ. i. பிழி இழையங்கள் ii. நிலை இழையங்கள்

02. அ.

i. தோல் - மேலணி, படைகொண்ட மேலாடை

ii. சிறுநீர்ப்பை - மழமழப்பான தசை

iii. கண் நரம்பு - நரம்பிழையம் நியூரோன்

iv. தொடை - வன்கூட்டுத் தசை, என்பிழையம், குருதி இழையம்

v. கை என்பு - என்பிழையம்

ஆ.

i. செங்குருதி- ஒட்சிசன் கடத்தல்

ii. வெண்குருதி- நோய்க்கிருமி கொல்லுதல், நோயெதிர்ப்பு பிற பொருளெதிரி உரு வாக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iii. குருதித்தட்டு- காயம் ஏற்படும்போது குருதி வெளியேறாது குருதி உறைதலை உருவாக்குதல்

இ. வலி கொண்ட தசை- விரைவாகச் சுருங்கும், நார், வரி கொண்டது

ஈ. இதயத்தசை-




| உ உரியம் | குருதி |
|---|---|
| i. செலுலோசு கலச்சுவர் உண்டு | கலச் சுவர் இல்லை |
| ii. உணவைக் கடத்தும் | யாவற்றையும் கடத்தும் |
| iii. பல வகையான கலங்கள் கொண்டன | 3 வகைக் கலங்களையும் திரவ இழையத்தையும் கொண்டது |
| iv. ஓரிடமான காலங்கள் | பாயக்கூடியன |

## கட்டுரை அமைப்பு வினாக்களுக்கான விடை

1. பாயும் இழையம், கலங்கள், திரவ இழையங்கள் உடையன. ஒருமித்து குறித்த தொழில் புரிவன.

   கலங்கள், திரவ இழையம் அவற்றின் அமைப்பு, தொழில் என்பவற்றைப் படங்களுடன் விளக்குதல்

2. பச்சையிலையில் கணப்படுகின்ற இழைய வகைகளைக் கூறி அவை ஆற்றும் தொழில்களையும் எவ்வாறு ஒருமித்துச் செயல்படுகின்ற தென்பதையும் இலையின் கட்டமைப்புப் படத்தின் உதவியுடன் விளக்குதல்.

### அல்குர்ஆனைக் கற்பித்து... (6 ஆம் பக்க தொடர்)

அவர்கள் தொழுகையை நிறைவு செய்த பின்னர் நான் யூசுஃப் இஸ்லாமிடம் சென்றேன். அவரிடம் நான் இஸ்லாத்தை ஏற்பதற்காக சொல்ல வேண்டிய வார்த்தைகளைக் கற்றுத் தருமாறு கேட்டேன். அவர் எனக்கு அதன் கருத்தை ஆங்கிலத்தில் தெளிவுபடுத்தினார். பின்னர் அவர் அரபு மொழியில் "அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை. முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் அல்லாஹ்வின் தூதராவார்" என்று கூறினார். நானும் அதனையே கூறினேன். இதனைக் கூறியபோது தௌஃபீக்கின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடியது.

பின்னர், தௌஃபீக் இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கைகள் தொடர்பான ஒரு நூலை எழுதினார். அதில் அவர், இஸ்லாத்தை பலரும் சகிப்புத்தன்மையுள்ள மார்க்கம்; அது தீவிரவாதத்தின் மார்க்கமல்ல என்று கூறுகின்றனர். ஆனால், அதனைத் தெளிவுபடுத்த ஒருவரும் முயற்சிக்கவில்லை. எனவே, நான் இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கைகள் பற்றி முஸ்லிம் அல்லாதவர்களுக்குத் தெளிவுபடுத்துவதற்காக ஒரு நூலை எழுதத் தீர்மானித்தேன். நான் அதில் இஸ்லாம் ஓர் அழகான மார்க்கம் என்பதையும் அது நிறைய வரப்பிரசாதங்களைக் கொண்டிருக்கின்றது என்பதையும் மக்களுக்குச் சொல்ல முயற்சித்தேன்.

இஸ்லாத்தின் உண்மையான வடிவத்தை உலகத்திற்கு அறிமுகப்படுத்துவதற்கு மிகச் சிறந்ததும் மிக விரைவானதுமான வழிமுறை, யதார்த்த வாழ்வில் ஒரு முஸ்லிம் இஸ்லாத்தை தனது வாழ்க்கையில் சிறந்த முறையில் எடுத்து நடப்பதாகும் என்று அவர் கூறுகிறார். **நன்றி: இணையம்**

### ஹதீஸ் பூங்கா (7 ஆம் பக்க தொடர்)

எமது படிப்பு, நாம் மற்றவர்களுடன் வைத்திருக்கின்ற உறவு போன்ற எமது செயற்பாடுகள் அனைத்தையும் மரணத்தின் பின்னால் உள்ள வாழ்க்கையே தீர்மானிக்க வேண்டும். உள்ளத்தில் எழும் சிந்தனைகூட மனிதனை சுவர்க்கம் செல்ல விடாது தடுத்துவிடும் அபாயத்தைக் கொண்டிருப்பதால் அதனையும் சீர்செய்ய வேண்டியவர்களாக நாம் உள்ளோம்.

எனவே, தினம் எம்மையும் எம் நல்லமல்கள் தொடர்பிலும் சுயவிசாரணை செய்வோம். நாளை மறுமையில் எமக்கெதிராக எம் உடல் உறுப்புக்கள் சாட்சிசொல்ல இருக்கின்றன. எனவே, அவை எமக்கு ஆதரவாக சாட்சி சொல்வதை நாம் விரும்பினால் எமது இச்சிறு பராயத்திலும் எம் சிந்தனையை மாசுபடுத்திவிடக்கூடிய உலக இன்பங்கள் தொடர்பில் எச்சரிக்கையாக இருந்து அதிகமான நல்லமல்களை செய்து மறுமையில் வெற்றியடையும் புத்திசாலிகளாக மாறுவோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண் கணிதத்தின் தந்தை அல்குவாரிஸ்மி



இஸ்லாமிய வரலாற்றில் அறிவியற் துறைக்குப் பங்களித்தவர்கள் பலர். இவர்களுள் கணிதத் துறைக்கு காத்திரமான பங்களித்தவர்கள் வரிசையில் ஒருவர்தான் முஹம்மது பின் மூஸா அல்குவாரிஸ்மி ஆவார். இவர் கி.பி 780ஆம் ஆண்டளவில் குவாரிசும் என்ற இடத்தில் பிறந்தார். அவ்விடம் இன்றைய உஸ்பெக்கிஸ்தானில் உள்ள 'கீவா' என்றழைக்கப்படும் பகுதியாகும். இவ்விடம் அக்காலத்தில் பாரசீகப் பேரரசின் ஒரு பகுதியாக இருந்தது.

குவாரிஸ்மி கணிதவியலாளர் மாத்திரமன்றி வானியல் ரீதியாகவும் புவியியல் ரீதியாகவும் பன்முக ஆளுமை கொண்டவராகத் திகழ்ந்தார். கணிதக் கலையில் தேர்ச்சி பெற்ற இவர், கணிதத் துறைக்கு காத்திரமான பங்களிப்பை வழங்கினார். எண் கணிதம் தொடர்பாகவும் சமன்பாடுகள் தொடர்பாகவும் பல எளிய முறைகளை அறிமுகப்படுத்தி கணிதத்தை எளிய வடிவில் கொண்டு வந்தார்.

கி.பி. 820ஆம் ஆண்டளவில் இவரால் எழுதப்பட்ட இயற்கணிதம் என்பதே ஒருபடிச் சமன்பாடு, இருபடிச் சமன்பாடு என்பவற்றின் முறையான தீர்வுகள் தொடர்பான முதல் நூலாகும். பலர் இவரை இயற்கணிதத்தின் தந்தை என்கின்றனர்.

ரோம எண்களில் பூச்சியம் இருக்கவில்லை. இதனால் இலக்கங்களின் பயன்பாடு கணிதத்தில் சிக்கலாக இருந்தது. இவரே பூச்சியம் அல்லது சைபர் என்ற எண் வடிவத்தை அறிமுகப்படுத்தினார். இதனால் எண்கணித முறை (Arithmetic) மிகவும் எளிமையானதாக மாறியது. zero என்ற ஆங்கில சொல் பிரெஞ்சு மொழியில் Ciphra எனப்படும். இது Sifr என்ற அரபுச் சொல்லிலிருந்து தோன்றியதாகும். Sifr என்றால் பூச்சியம் என்று பொருள்படும்.

இவர் ஹி. 205 (கி.பி 820) இல் 'கிதாபுல் முக்தஸர் பீ ஹிஸாப் அல் ஜபர் வல் முகாபலா' என்ற நூலை எழுதினார். இந் நூலில் பயன்படுத்தப்பட்ட 'அல்ஜபர்' என்ற சொல்லிலிருந்தே 'அல்ஜீப்ரா' (Algebra) என்ற சொல் பிறந்தது. இதுவே இன்று அட்சர கணிதத்தைக் குறிக்கப் பயன்படுகிறது. இந்த வகையில் அட்சர கணிதவியலின் தந்தையும் இவர்தான். மேலும் இவர், 'அல்ஜம்உ வல் தப்ரீக் பீ ஹிஸாப் அல் ஹின்த்' (இந்திய எண் கணிதத்தில் கூட்டலும் கழித்தலும்) எனும் நூலை எழுதினார்.

இவரது நூல்களே 1 முதல் 9 வரையான இலக்கங்களையும் பூச்சியத்தையும் ஐரோப்பியருக்கு அறிமுகப்படுத்தின. பூச்சியத்தின் முக்கியத்துவத்தையும் பயன்பாட்டையும் அதன் பின்னரே ஐரோப்பியர் அறிந்து கொண்டனர். 1,2,3... என்ற எண்கணித முறையும் இவரது பெயராலேயே ஐரோப்பாவிலிருந்து அறிமுகமானது. அதனை ஆங்கிலத்தில் Algorithm என அழைப்பர். அல்குவாரிஸ்மி என்ற பெயரே Algorithm என மருவி வந்துள்ளது.

இவ்வாறு அறிவியல் துறைக்கு, குறிப்பாக கணிதத் துறைக்கு இவர் வழங்கிய பங்களிப்புகள் ஐரோப்பியராலேயே புகழப்படுகின்றன. இவரது நூல்கள் 16ம் நூற்றாண்டு வரை ஐரோப்பிய பல்கலைக்கழகங்களில் பாடநூலாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. மடக்கையைக் குறிக்கும் லொகோரிதம் (logarithm) என்ற சொல்லும் இவரது பெயரிலிருந்தே வந்தது என கூறப்படுகின்றது.

எண்கணிதம் என்னும் இவரது நூலின் இலத்தின் மொழிபெயர்ப்பு 12ஆம் நூற்றாண்டில் வெளியிடப்பட்டது. தொலமியின், புவியியல் என்னும் நூலைத் திருத்தி எழுதிய இவர் வானியல், தொடர்பிலும் நூல்களை எழுதியுள்ளார். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுற்றுச் சூழலுடன் நட்புக் கொள்வோம்

உலக சூழல் தினம் (World Environment Day) ஆனது ஐ.நா. சபையால் ஜூன் 5 ஆம் திகதி கொண்டாடப்பட்டுவரும் சூழல் தொடர்பான முக்கிய நிகழ்வு ஆகும். ஐக்கிய நாடுகள் சபையின் ஏற்பாட்டில் 1972ஆம் ஆண்டு சுவீடனின் தலைநகரான ஸ்ரொக்ஹோமில் (Stockholm) 'மனித குடியிருப்பும் சுற்றாடலும்' என்ற வரலாற்றுப் புகழ்மிக்க உலக மாநாடு நடை பெற்றது. அதில் உலக சுற்றுச் சூழலின் முக்கியத்துவம், இயற்கை வளங்கள், அதன் பாதுகாப்பு என்பன பற்றி கலந்துரையாடப்பட்டது. முடிவில், ஜூன் 5ஆம் திகதியை உலக சுற்றுச் சூழல் தினமாக பிரகடனப்படுத்தும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டத்திற்குப் பொறுப்பாக ஐக்கிய நாடுகள் சூழல் திட்டம் செயற்படுகின்றது.

உலக சூழல் தின நிகழ்வுகளின் முக்கியமான நோக்கம், உலகில் சூழலின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதும் அரசியல் மட்டத்தில் கவனத்தை ஈர்த்து உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்குத் தூண்டுவதுமாகும்.

அன்று இயற்கையோடு ஒன்றித்து வாழ்ந்த மனிதன் இன்று சூழலின் எதிரியாக மாறி விட்டான். மனிதனது கண்டுபிடிப்புக்களும் விஞ்ஞான வளர்ச்சியும் சூழலைப் பாதுகாப்பதற்குப் பதிலாக அதற்கு அதிகளவில் கேடு விளைவித்தே வருகின்றமை கண்கூடு.

இவ்வாறு மனிதன் மரங்களை அளவுக்கதிகம் வெட்டுவதும் காடழிப்பும் புவியின் வெப்ப நிலை அதிகரிக்கவும் மழை வீழ்ச்சி குறையவும் காரணமாக உள்ளன. இதனால் இது தொடர்பான பல்வேறு மாநாடுகள் நடத்தப்பட்டு சூழலைப் பாதுகாப்ப தற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

சூழல் தொடர்பான விடயங்களிலே இஸ்லாம் மிகக் கவனமாக நடந்து கொள்ளும்படி எம்மைப் பணிக்கிறது. பயன்தரும் மரங்களை வெட்டுவதைத் தடுக்கிறது. உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் யுத்தத்திற்கு தயாராக இருந்த படையை நோக்கி பயன்தரும் மரங்களை வெட்ட வேண்டாம் என்று உபதேசித்த வரிகள்கூட இதனை எவ்வளவு அருமையாகப் படம் பிடித்துக் காட்டுகின்றன!

மரங்களை வெட்டுவதிலிருந்து தவிர்ந்திருப்பது மட்டும் இப் பிரச்சினைக்குத் தீர்வல்ல என்பதையும் மரங்களை நட்டு வளர்ப்பதும் சூழலைக் காப்பதில் காத்திரமான பங்களிப்பு வழங்கும் என்பதையும் அருமைத் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கற்றுத் தந்தார்கள்.

மரங்களை நடுவதுடன் மட்டுமல்லாது சுற்றாடலுடன் நேசமாகவும் நடந்து கொள்ள வேண்டும் என இஸ்லாம் வழிகாட்டல் வழங்குகிறது. சுற்றாடலைப் பேணிப் பாதுகாப்பதன் அவசியத்தை வலியுறுத்துகிறது.

மனித நலனுக்கு கேடு விளைவிக்கக்கூடியவற்றிலிருந்து தவிர்ந்து இருக்குமாறு இஸ்லாம் எமக்குப் போதிக்கிறது. அல்லாஹ்வின் பிரதிநிதி என்ற வகையில் பூமியில் வாழும் மனிதன் தான் வாழும் பூமிக்குக் கேடு விளைவிக்காமல் வாழ்வது மட்டுமன்றி அதனைப் பாதுகாப்பதும் அவனது கடமையாகும். சூழலில் உள்ள ஒவ்வொன்றும் அல்லாஹ்வின் படைப்பாகும். நீர், நிலம், காற்று, ஆகாயம், மரம், செடி, தாவரம், மலைகள், பள்ளத்தாக்குகள்... என அனைத்தும் அவனது படைப்புக்களாகும். ஆகவே, இஸ்லாத்தின் போதனைப்படி ஒரு முஸ்லிம் இவற்றைப் பாதுகாத்து வாழ்வது மாத்திரமன்றி, அவற்றுக்குக் கேடு விளைவிக்காமல் வாழ்வதும் அவனது பொறுப்பாகும்.

இவ்வனைத்துப் படைப்புக்களும் மனிதனுக்காகவே படைக்கப்பட்டுள்ளன. அவற்றைப் பயன்படுத்துவது மட்டுமல்லாமல் பாதுகாப்பதும் எமது கடமை என்பதை நாம் மறந்து விடுகிறோம். இவ்வனைத்துப் படைப்புக்களும் இணைந்துதான் சுற்றாடல், சூழல் எனப்படுகிறது. இவற்றுடன் மனிதன் நட்பாக நடந்து கொள்ள வேண்டும்.

இயற்கை அல்லாஹ்வின் அருட்கொடை. அவ்வருள்களை நாம் அருமையாகப் பயன்படுத்த வேண்டும். நாம் மேற்கொள்கின்ற ஒவ்வொரு செயற்பாடும் அவ் அருட்கொடைகளை அமானிதமாகப் பயன்படுத்துவதாக அமைய வேண்டும். இவை குறித்து நாம் நாளை மறுமையில் விசாரிக்கப்படுவோம் என்ற உணர்வுடன் நடந்து கொள்ள வேண்டும். இது குறித்து ஒவ்வொரு மனிதனும் விழிப்புணர்வோடு செயற்பட வேண்டும். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் எண்ணப்படியே இந்த உலகம்

டாக்டர் உஜ்வால் பட்னி எழுதிய 'வெற்றியாளர்களும் தோல்வியாளர்களும்' என்ற நூலைத் தழுவி எழுதப்பட்டது.

இந்த உலகம் குறித்து ஒவ்வொரு மனிதனுக்கும் ஒவ்வொரு விதமான எண்ணம் உண்டு. சிலருக்கு முள்ளாக உறுத்தும். சிலருக்கு மலராக மகிழ்ச்சியளிக்கும். வாழ்க்கை முழுவதும் தடைகளாக இருக்கின்றனவே என சிலர் வருத்தப்படுகின்றார்கள். ஆனால் அந்தத் தடைகளையே மிகச் சிறந்த வாய்ப்புகளாகக் கருதுபவர்களும் உண்டு.

ஒரு வருடம் கழிந்து விட்டதே என சிலர் தங்கள் பிறந்தநாளன்று புலம்புவது வழக்கம். எனினும், வேறு சிலரோ ஒரு புதிய அத்தியாயத்தின் தொடக்கமாக அதனைக் கருதுகிறார்கள். நமது எண்ணப்படியே நமது செயல்களும் அமைகின்றன.

ஒரு முறை நான்கு குருடர்கள் ஒரு அரசனை சந்தித்தார்கள். யானை ஒன்றை அவர்களுக்கு பரிசளித்த அரசன், அதனைத் தொட்டுப் பார்த்துவிட்டு கருத்துக்களை தெரிவிக்கும்படி கூறினான். வால் பகுதியைத் தொட்டுப் பார்த்தவன் யானை கயிறு ஒன்றை ஒத்திருப்பதாகக் கூறினான். யானையின் காலை தொட்டுப் பார்த்தவன், இந்த மிருக்கும் மிகப் பெரிய மரத்தின் வேர்ப்பகுதி போல இருப்ப தாகக் கூறினான். தும்பிக்கைப் பக்கம் நின்றவன் யானை ஒரு பாம்பைப் போல இருப்பதாகத் தெரி வித்தான். யானையின் வயிற்றைத் தடவிப் பார்த்த நான்காவது நபர், மிகப் பெரிய சுவர் போல இருப்ப தாகக் கூறினான். இப்படி ஒவ்வொருவரும் ஒவ்வொரு கருத்தை வெளிப்படுத்தியதால் பின்னர் அவர்களுக்குள் பெரும் வாக்குவாதம் ஏற்பட்டது.

இதன் மூலம் வெளிவரும் உண்மை என்னவென்றால்... ஒவ்வொருவரும் தத்தமது கண்ணோட்டத்தின் படியே, இந்த உலகத்தை உணர்ந்து கொள்கிறார்கள். ஒருவருக்குத் தவறாகத் தெரிவது அடுத்தவருக்கு சிறப்பானதாகத் தெரியலாம். ஒருவருக்கு தேனாக இனிப்பது மற்றவருக்கு கசப்பாக இருக்கலாம்.

நமது புரிதலின் ஆழம், நமது சிந்தனைகள் மற்றும் அனுபவங்களையே முழுமையாகச் சார்ந்திருக் கிறது. எதையும் பகுத்துணரும் சுய சிந்தனைக்கு ஏற்பவே ஒருவர் செயல்பட வேண்டும். மகிழ்ச்சியை வரவழைக்கும் வகையில் உங்கள் செயல்பாடுகள் இருக்குமானால், அது உங்களுக்கு நிச்சயம் வாய்க்கும். மாறாக, எதிர்மறை சிந்தனையோடு செயல்பட்டால்... துன்பங்கள் உங்களை விட்டு ஒருபோதும் விலகாது.

எந்தவொரு விஷயம் குறித்தும் இறுதி முடிவு எடுப்பதற்கு முன்பாக, சற்று கால அவகாசம் எடுத்துக் கொண்டு அது தொடர்பான வேறொரு கோணத்தையும் ஆராயுங்கள். மகிழ்ச்சியை வரவழைப்பது எப்படி? என்பது குறித்து உங்களுக்கு நீங்களே யோசித்துப் பயிற்சி செய்து பாருங்கள்.

புகழ்பெற்ற ஒரு காலணி தயாரிப்பு நிறுவனம், ஆபிரிக்காவில் தனது வியாபாரத்தை விரிவுபடுத்த முடிவு செய்தது. இது குறித்து கருத்துக் கணிப்பீடு எடுப்பதற்காக ஒரு விற்பனை பிரதிநிதியை அங்கே அனுப்பி வைத்தது. ஆபிரிக்காவிற்குச் சென்ற அவர், அங்கே பெரும்பாலானவர்கள் வெறும் காலுடன் நடப்பதைக் கண்டு அதிர்ச்சியுற்றார். இங்கே யாரும் காலணிகள் அணிவதில்லை, எனவே நமது வியாபார விரிவாக்கல் நடவடிக்கைகளை கைவிட வேண்டும் என்று அவர் அறிக்கை அனுப்பினார். பின்னர் வேறொரு விற்பனைப் பிரதிநிதி ஆபிரிக்காவுக்கு அனுப்பி வைக்கப்பட்டார். அவர் அனுப்பிய அறிக்கையில், காலணி அணிவதன் அவசியத்தை இங்குள்ளவர்களிடம் எடுத்துக் கூறினால், வியாபாரத்தைப் பொறுத்தவரை நமக்கு ஒரு பொன்னான வாய்ப்புக் காத்திருக்கிறது. இதன் மூலம் நமது நிறுவனம் பெரும் இலாபம் சம்பா திக்க முடியும் என உற்சாகம் கொப்பளிக்க குறிப்பிட்டி ருந்தார்.

ஒரு நாணயத்துக்கு இரு பக்கங்கள் உண்டு. எதை எடுத்துக் கொள்கிறோம் என்பதில்தான் வித்தியாசம் அடங்கியிருக்கிறது. வசதி வாய்ப்புகளால் மட்டுமே ஒருவருக்கு திருப்தி கிட்டி விடாது. ஏனெனில், மனத் திருப்திக்கான தூண்டுகோலாக வளர்ச்சியைக் கருத முடியாது.

செல்வச் செழிப்பிற்கும் மனத் திருப்திக்கும் நேரடித் தொடர்பு இருந்திருந்தால் அதிகமானவர்கள் மன அழுத்தம் காரணமாக தற்கொலை செய்து கொண்டிருக்க மாட்டார்கள். மனிதர்கள் இப்படி மனச் சோர்வு அடைவதற்கான காரணங்கள் ஏறத்தாழ ஒரே மாதிரியாகவே உள்ளன. உறவுகளின் விரிசல், நினைத்தது கைகூடாதது நம்பியவர்கள் நட்டாற்றில் விடுவது என இந்தப் பட்டியல் நீளுகிறது. தவறுகளுக்கு அடுத்தவர் மீது பழி போடுவதுதான் பலரின் வாடிக்கையாக உள்ளது. அப்படி செய்யாமல் கொஞ்சம் கால அவகாசம் எடுத்து உங்கள் வழிமுறையை மறு ஆய்வு செய்யுங்கள். அடுத்தவர்களை மாற்ற முயற்சிப்பதை விட சூழ்நிலைக்கேற்ப நம்மை நாமே மாற்றிக் கொள்வது மிகவும் எளிதான செயலாக இருக்கும். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஐந்தாம் தர புலமைப்பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்

**வினாப்பத்திரம் I**

**நேரம் 45 நிமிடங்கள்**

தயாரிப்பு: எம்.எம். முபாரக், எஸ்.ஐ.எல். முஸம்மில்
(ஆசிரியர்கள்: பு/ ஸாஹிறா ஆரம்பப் பாடசாலை)

**கீழ்வரும் உரையாடலை அவதானித்து வினாக்களுக்கு விடை தருக.**

"தம்பி, அவை எங்கே போகினம்?"
"தெரியவில்லை தாத்தா"
"கொஞ்சம் கேளேன்"
"மாமா... எங்கே பயணம்?"
"மட்டக்களப்புக்கு"
"மட்டக்களப்புக்கு போகினமாம் தாத்தா"
"ஓஹோ...! மீன்பாடும் தேன்நாட்டுக்கா?"
"நான் பிறந்து, வளர்ந்து, ஓடித்திரிந்த இடமடா தம்பி"
"எப்ப வருவினமாம்"
"மாமா... எப்ப வருவீங்க?"
"ம்... இன்று புதன், நாளை மறுநாள் வருவோம்"
"தாத்தா, நாளை மறுநாள் வருவினமாம்"
"தம்பி நல்ல தயிர்ச்சட்டி ஒன்று வாங்கி வரச்சொல்லு"
"மாமா... தாத்தாவுக்கு நல்ல தயிர்ச்சட்டி ஒன்று வாங்கி வரட்டுமாம்"
"சரிடா தம்பி"
"சரி தாத்தா"
"தம்பி தயிர்ச்சட்டி எவ்வளவோ தெரிய வில்லை"
"சென்ற முறை ஆயிரம் ரூபாய் தாள் ஒன்றை கொடுத்தேன். எண்ணூற்று பதினைந்து ரூபாய் மீதி தந்தார்கள்".
"உங்களுக்கென்ன மாமா பணமா கேட்கப் போகிறார்?"
"சரிடா தம்பி கலப்பையை எடுத்துக் கொண்டு வேலைக்கு போக வேண்டும் நான் வாறன்."

1. தாத்தா செல்ல இருந்த இடம்
   I. மட்டக்களப்பு II.வயல் III. யாழ்ப்பாணம்
2. 'மீன்பாடும் தேன் நாடு' என்ற சிறப்புப் பெயர் பெற்ற இடம்
   I. மட்டக்களப்பு II. மீன் சந்தை III. கண்டி
3. அவை போகினம் என்ற பேச்சு வழக்கின் எழுத்து வடிவம்
   I. அவர்கள் போகிறார்கள்
   II. அவை போகின்றன
   III. அவர் போகிறார்
4. தாத்தா பிறந்த இடம்
   I. யாழ்ப்பாணம் II. மன்னார்
   III. மட்டக்களப்பு
5. மாமா ஊருக்குத் திரும்புவதாகக் கூறிய நாள்
   I. புதன் II. வியாழன் III. வெள்ளி
6. தயிர்ச்சட்டி ஒன்று எவ்வளவு?
   I. ரூபாய் எண்ணூற்றுப் பதினைந்து
   II. ரூபாய் இருநூறு
   III. ரூபாய் நூற்று எண்பத்தைந்து
7. இவ் உரையாடலில் ஈடுபட்டோர்
   I. மூவர் II. இருவர் III. கூற முடியாது
8. பயணம் என்பதற்கான ஒத்த பதம்
   I. இடப்பெயர்வு II. பிரயாணம்
   III. புறப்படுதல்
9. மாமா எங்கே பயணம்? என்பது
   I. ஏவல் வாக்கியம்
   II. வினை முற்று வாக்கியம்
   III. வினா வாக்கியம்
10. உரையாடலில் இடம்பெறாத இடப்பெயர் ஒன்று
    I. மட்டக்களப்பு II. வயல் III. புதன்

**கட்டத்தினுள் இருக்கும் மிகச் சரியான வாக்கியத்தை புள்ளிக் கோட்டில் எழுதுக.**

i. மாரி காலத்தில் உக்கிரமான உஷ்ணம் நிலவும்.
ii. ஆழமான கடல் நீல நிறமாகக் காட்சி தரும்.
iii. இந்தியாவில் அதிகமாக கங்காருகள் வாழ்கின்றன.
iv. செயற்கைப் பசளை சூழலை மாசுபடுத்தாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. ..................................................................


12. சுவாசப் பயிற்சிக்கு உதவும் உபகரணங்களின் பெயர்களை புள்ளிக் கோட்டில் எழுதுக.

| |
|---|
| மேளம், பலூன், வீணை, ஊதி, புல்லாங்குழல், ரபான், கிட்டார், நாதஸ்வரம், பானை |

I. .............................. II. ..............................

III. .............................. IV. ..............................

தரப்பட்டுள்ள அடைப்புகளில் உள்ள ஒவ்வோர் உருவுக்கும் ஆங்கில எழுத்துக்கள் தரப்பட்டுள்ளன.




14. சரியான விடையின் கீழ் கீறிடுக.

| | | | | |
|---|---|---|---|---|
| i. | BC | AH | FD | EG |
| ii. | AH | GB | DF | EC |
| iii. | DH | AB | DC | EF |

15. மிகவும் சரியான ஒழுங்கு வரிசையின் கீழ் கீறிடுக.
   i. நாடு, பிரதேசம், கிராமம், மாவட்டம், மாகாணம்
   ii. மாவட்டம், மாகாணம், பிரதேசம், நாடு, கிராமம்
   iii. கிராமம், பிரதேசம், மாவட்டம், மாகாணம், நாடு

16. i. மாணவர், மாணவத் தலைவர், ஆசிரியர், அதிபர்
   ii. ஆசிரியர், அதிபர், மாணவர், மாணவத் தலைவர்
   iii. அதிபர், மாணவர், ஆசிரியர், மாணவத் தலைவர்.

17. ஒரு சதுர வடிவமான காணியின் சுற்றளவு 360m ஆகும். இக்காணியின் ஒரு பக்க நீளம்

i. 90km ii. 90cm iii. 90m

18. 8m நீளமும் 6m அகலமும் கொண்ட சுவருக்கு வர்ணம் பூசுவதற்கு 2 லீற்றர் தீந்தை தேவை எனின், 6m நீளமும் 2m அகலமும் கொண்ட சுவருக்கு வர்ணம் பூசுவதற்கு எத்தனை லீற்றர் தீந்தை தேவை?

i. 1 லீற்றர் ii. 3 லீற்றர் iii. 500 மில்லி லீற்றர்

19. பின்வரும் சொல் வரிசைகளில் ஏனைய சொற்களுடன் பொருந்தாத சொல்லின் கீழ் கீறிடுக.

உதைப்பந்தாட்டம், கபடி, கிரிக்கெட், கூடைப்பந்தாட்டம்

20. எலி, அணில், கீரி, காகம்

கீழ்வரும் வாக்கியங்கள் சரியாயின் 'சரி' எனவும் பிழையாயின் 'பிழை' எனவும் குறிப்பிடுக.

21. நாம் ஒற்றுமையாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பது நிகழ்கால வாக்கியமாகும். (        )

22. கறுத்த காகம் கறுப்பு முட்டையே இடும். (        )

23. மா மரம் ஆணிவேர் அற்ற தாவரமாகும். (        )

24. க, ச, ட என்பன உயிர் எழுத்துக்களாகும். (        )

25. மெய், வாய், கண், மூக்கு, செவி என்பன ஐம்பொறியாகும். (        )

பின்வரும் சிங்கள சொற்களுக்கான கருத்தை எழுதுக.


26. சருங்கொல: ..............................................

27. எலவலு: ..............................................

பின்வரும் ஆங்கில சொற்களுக்கான கருத்தை எழுதுக.


28. Morning: ..............................................

29. Knife: ..............................................




30. [-] என்ற இடத்திற்கு வர வேண்டிய பெறுமானம் எது?


i. 36 ii. 32 iii. 38


31. 


32. 



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

33.  .......

34.  .......

35.  .......


36. ஆபரணங்கள் செய்யப் பயன்படும் உலோகம் எது?
i. தங்கம் ii. இரும்பு iii. அலுமினியம்

37. சோறு சமைப்பதற்கான அரிசியைக் களைவதற்கு மிகப் பொருத்தமான பாத்திரம்
i. பானை ii. அரிக்குஞ் சட்டி
iii. மட்பானை

38. மாத்தறை, காலி போன்ற நகரங்கள் அமைந்துள்ள மாகாணம் எது?
i. மேல் மாகாணம் ii. தென் மாகாணம்
iii. ஊவா மாகாணம்

39. இரத்தினக் கற்களுக்கு பிரசித்தி பெற்ற பிரதேசம் இரத்தினபுரியாகும். இது எந்த மாகாணத்தில் அமைந்துள்ளது?
i. மத்திய மாகாணம் ii. மேல் மாகாணம்
iii. சப்பிரகமுவ மாகாணம்


40. இலங்கையில் அதிகளவு குளங்களைக் கொண்ட மாகாணம் எது?
i. தென் மாகாணம் ii. வட மாகாணம்
iii. வட மத்திய மாகாணம்




41. i. .........
ii. .........
iii. ........

**பின்வரும் எண்சட்டங்களில் காட்டப்பட்டுள்ள எண்களைக் கூட்டுக.**

பின்வரும் எண் கோலத்தில் B என்ற இடத்தில் வர வேண்டிய எண்ணை எழுதுக.

42. 


43. வித்துக்களை அகற்றிய பின் உணவாக உண்ணும் பழம் எது?
i. கொய்யா ii. பப்பாசி iii. அப்பிள்

44. பின்வரும் பூக்களில் வேறுபட்ட பூ எது?
i. சூரிய காந்தி ii. செவ்வரத்தை iii. தாமரை

45. புத்தக அலுமாரியில் உள்ள புத்தகங்களுக்கிடையே மறைந்து வாழும் பிராணி எது?
i. எலி ii. இராம பானம் iii. கறையான்

46. சுவட்டு நிகழ்ச்சிகளில் ஒன்று
i. நீளம் பாய்தல் ii. அஞ்சல் ஓட்டம்
iii. குண்டெறிதல்

47. ஹொக்கி விளையாட்டில் ஒரு குழுவில் பங்கு பற்றுபவர்களின் எண்ணிக்கை.
i. 5 பேர் ii. 11 பேர் iii. 6 பேர்

48. இலங்கையின் முதலாவது தலைநகரம் எது?
i. கொழும்பு ii. கண்டி iii. அநுராதபுரம்

49. மிகவும் குளிர்ச்சியான கோள் எது?
i. புதன் ii. புளூட்டோ iii. வியாழன்

50. பொருட்களை பல உருக்களாகக் காட்டுவது?
i. நுணுக்குக் காட்டி ii. பன்னிற உருக்காட்டி
iii. கண்ணாடி

"மறுமை நாளில் எனது சமூகத்திலிருந்து ஒரு கூட்டத்தினர் வெள்ளை நிற 'துஹாமா' மலை அளவு நன்மைகளுடன் வருவார்கள் என்பதை நிச்சயமாக நான் அறிவேன். அவற்றை அல்லாஹ் சிதறடிக்கப்பட்ட துகள்களாக ஆக்கிவிடுவான். நிச்சயமாக அவர்களைப் பொறுத்தவரை அவர்கள் உங்களின் சகோதரர்கள். உங்கள் பரம்பரையைச் சேர்ந்தவர்கள். நீங்கள் இரவில் நின்று வணங்குவதைப் போல் அவர்களும் நின்று வணங்கக் கூடியவர்களாக இருந்தார்கள். என்றாலும், அவர்கள் தனிமையில் இருக்கும்போது அல்லாஹ் தடுத்தவற்றை (ஹராமானவற்றை) செய்யக்கூடியவர்களாக இருந்தார்கள்."

(இப்னு மாஜா)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஐந்தாம் தர புலமைப்பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்

ஆசிரியர்: எஸ்.ஐ.எல். முஸம்மில், எம்.எம். முபாரக்
(ஸாஹிறா ஆரம்பப் பாடசாலை, புத்தளம்)

**வினாப்பத்திரம் II**

**நேரம்**
**1 மணி 15 நிமிடம்**

**அடைப்புக்குள் உள்ள சரியான விடையை புள்ளிக் கோட்டில் எழுதுக.**

(யப்பானிய மூளைக் காய்ச்சல், உயிர்ச்சத்து, கண் நோய், பாலூட்டி, தங்கம், அஹிம்சை, பீரங்கி)

1. திமிங்கிலம் ஒரு கடல் வாழ் உயிரினப் ........................................................ ஆகும்.
2. ................. நுளம்பினால் பரவும் ஒரு நோய்.
3. பெறுமதி மிக்க உலோகம் ............. ஆகும்.
4. .................... குறைபாட்டினால் மாலைக் கண் நோய் உண்டாகின்றது.
5. காந்தியடிகள் சுதந்திர போராட்டத்திற்கு பயன்படுத்திய சக்தி மிக்க ஆயுதம் ............ ஆகும்.

**6 முதல் 9 வரையிலான வினாக்களுக்கு தரப்படும் தகவல்கள் பிழையானவை. பிழையானதற்கான காரணம் எதுவெனக் கண்டறிந்து அதன் இலக்கத்தை புள்ளிக் கோட்டில் எழுதுக.**

6. நட்சத்திரங்கள் பகலில் அழகாகப் பிரகாசித்தன.
   I. நட்சத்திரங்கள் பகலில் பிரகாசிப்பதில்லை.
   II. நட்சத்திரங்கள் பகலில் பிரகாசிப்பதை கண்ணால் காண முடியாது.
   III. நட்சத்திரங்கள் பிரகாசிப்பதில்லை.
   (.................)
7. நூற்று ஐம்பது பயணிகளை ஏற்றிக்கொண்டு கப்பல் பொய்கையைக் கடந்தது.
   I. கப்பலில் நூற்று ஐம்பது பயணிகள் பயணம் செய்ய முடியாது.
   II. நூற்று ஐம்பது பயணிகளும் நிறை கூடிய வர்கள்.
   III. பொய்கையில் கப்பல் செல்ல முடியாது.
   (.................)
8. வின்சென்ட் ஆரம்பப் பாடசாலை மாணவர்கள் சாதாரண தரப்பரீட்சையில் திறமை சித்தி அடைந்தனர்.
   I. வின்சென்ட் ஆரம்ப பாடசாலை மாணவர்களால் சாதாரண பரீட்சையில் தோற்ற முடியாது.
   II. மாணவர்களால் சித்தி மட்டுமே பெற முடியும்.
   III. மாணவர்களால் சித்தி அடைய முடியாது.
   (.................)
9. மாரி காலத்தில் உப்புத் தொழிலாளர்கள் அதிக உப்பை உற்பத்தி செய்தனர்.
   I. இலங்கையில் அதிக உப்பு விளையாது.
   II. மாரிகாலத்தில் தொழிலாளர்கள் நித்திரை செய்வர்.
   III. உப்பு செய்கைக்கு மாரி காலம் உகந்த தல்ல. (.................)

**பின்வரும் சிங்கள வாக்கியத்திற்கான கருத்தை எழுதுக.**

10. மேக ஹொந்தய்: ........................................
11. இர பாயனவா: ........................................

**கட்டத்திற்குள் இருக்கும் எழுத்துக்களைப் பயன்படுத்தி கீழ்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

| | | | | |
|---|---|---|---|---|
| ச் | ப | னை | ம் | ம |
| ட் | வ | லி | தூ | கா |
| க் | பா | டா | சி | இ |
| பூ | க | த | னொ | லை |

12. இலங்கையில் உள்ள சகல சமயத்தவர்களும் சென்று வழிபடும் மலை ...........................
13. மதில் மேல் இது என்பர் ...........................
14. இதன்போதுதான் கனவு வர முடியும் ..........
15. அழகான பூச்சி ........................................

**ஆங்கில வாக்கியத்திற்கான கருத்தை எழுதுக.**

16. I am a beautiful girl - ...............................
17. Big box - ........................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. கீழ்வரும் பந்தியை ஒழுங்குபடுத்த நான்காவதாக வரும் வாக்கியத்திற்கு கோடிடுக.

I. போடப்பட்டிருந்த சுவட்டுகளிலே நிறுத்தப்பட்டார்கள்.
II. வெற்றிக் கம்பத்தை அடைந்தவன் ஆனந்தக் கண்ணீர் வடித்தான்.
III. பல்வேறு பாடசாலைகளில் இருந்து வந்த மாணவர்கள் மைதானத்தில் பயிற்சிகளை மேற்கொண்டவாறு நின்றனர்.
IV. டுமீல் என்ற சப்தத்துடன் வில்லில் இருந்து புறப்பட்ட அம்பைப் போன்று மாணவர்கள் ஓட ஆரம்பித்தனர்.
V. நடுவர்கள் ஆயத்தமானதும் போட்டியாளர்கள் அழைக்கப்பட்டனர்.

**பின்வரும் சொற்களுக்கு பன்மைச் சொற்களைத் தருக.**

19. முள்: .................... 20. கதவு: ....................


**பின்வரும் சொற்களுக்கான எதிர்க்கருத்தை தருக.**

21. கனவு:............. 22. ஞாபகம்: ....................

சிறிய பாம்பை பெரிய கழுகு தூக்கிச் சென்றது என்பதில்

23. செயப்படு பொருள்: ..................................
24. எழுவாய் அடைமொழி: ...........................
25. பெயர் அடைமொழிகள்:..........................
26. 20 மாம்பழங்களின் விலை ரூபா 300 எனின், 30 மாம்பழங்களின் விலை யாது?

1. ரூபா 350 2. ரூபா 400 3. ரூபா 450



27. நிழற்றப்பட்ட பகுதி முழு உருவில் என்ன பின்னம்?

i. $\frac{3}{6}$ ii. $\frac{2}{5}$ iii. $\frac{1}{12}$


28. நிழற்றப்படாத பகுதி முழு உருவில் என்ன பின்னம்?

i. $\frac{7}{12}$ ii. $\frac{4}{6}$ iii. $\frac{5}{12}$

29. அன்வர், அசாம் ஆகிய இருவரிடமும் 48 டொபிகள் இருந்தன. அன்வரிடம் அசாமை விட 8 டொபிகள் கூடுதலாக இருந்தன. அசாமிடம் இருந்த டொபிகள் எத்தனை?

i.24 ii. 30 iii. 32

**கீழ்வரும் உருவிற்குப் பொருத்தமான பெயரை எழுதுக.**





31. ............. 32. ............. 33. .............

33. ஒரு நகரம் இரு கட்டங்களில் அபிவிருத்தி செய்யத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. முதல் கட்டத்திற்கு 9 மாதங்களும் இரண்டாம் கட்டத்திற்கு 10 மாதங்களும் எடுக்கின்றன. அபிவிருத்திப் பணி 2010ம் ஆண்டு ஜனவரி மாதம் 16ம் திகதி ஆரம்பிக்கப்பட்டது எனின், எந்த ஆண்டில் நகர அபிவிருத்தி வேலைகள் முடிவடையும்? ..................................

**கீழ்வரும் அட்டவணையை அவதானித்து கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | இரத்தினபுரி | ஆமை |
| தாலாட்டுப் பாடல் | வானிலை பற்றிய செய்தி | கொழும்பு |
| ஆளுநர் | அரசாங்க அதிபர் | விளையாட்டுப் பாடல் |
| நத்தை | வட்டவளை | கிழங்குகள் |
| தலைப்புச் செய்தி | கீரைகள் | பிரதமர் |

34. சனத்தொகை கூடிய சிறிய மாவட்டம் ..........
35. இலங்கையில் அதி கூடிய மழை வீழ்ச்சியுள்ள இடம் .........................................
36. குழந்தை ஒன்றை நித்திரை செய்ய பாடப்படும் பாடல் .........................................
37. தொலைக்காட்சியில் செய்தி வாசிக்கப்படும்போது முதலில் வாசிக்கப்படுவது .........
38. மாகாண சபை நிர்வாகத்திற்குப் பொறுப்பானவர் .........................................
39. மாவட்டத்திற்குப் பொறுப்பானவர் ............
40. மிகவும் வேகமாக ஊர்ந்து செல்லும் பிராணி .........................................
41. இரும்புச் சத்து கூடுதலாக உள்ள உணவு .........................................
42. மழை காலங்களில் அடிக்கடி வெள்ளப் பெருக்கு ஏற்படும் நகரம் ...........................
43. ஒரே குடும்பத்தைச் சேர்ந்த விலங்கு வகைகள் யாவை?.........................................

i. புலி, சிறுத்தை, சிங்கம்
ii. யானை, மான், மரை
iii. முயல், கீரி, ஓணான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY

44. காற்றுக் கருவிகளில் ஒன்று

i. நாதஸ்வரம் ii. மேளம் iii. வயலின்

**மிகச் சரியான விடையின் கீழ் கீறிடுக.**

45. வெப்பத்தை விரைவாகக் கடத்தக்கூடியது எது?

i. அலுமினியம் ii. பிளாஸ்டிக் கோப்பை iii. கண்ணாடிக் குவளை

46. அரச இலச்சினையின் மேல் காணப்படுவது?

i. நிறை கலசம் ii. தர்ம சக்கரம் iii. நெற்கதிர்

47. 271 கொப்பிகள் உள்ளன. ஒரு பிள்ளைக்கு 7 வீதம் எத்தனை பிள்ளைக்குக் கொடுக்கலாம்?

i. 302 ii. 301 iii. 31

48. 80 கொய்யாப்பழங்களில் $\frac{3}{8}$ பழுதடைந்தன. பழுதடையாத கொய்யாப்பழங்கள் எத்தனை?

i. 80 ii. 30 iii. 50

49. 75, 214 இல் இலக்கம் 5ன் பெறுமதி யாது?

i. 500 ii. 50 000 iii. 5 000

50. புல்லாங்குழல் செய்வதற்குப் பயன்படுத்தும் தாவரம்?

i. மூங்கில் ii. வாழை iii. பனை

51. கிணற்றில் இருந்து நீரை இலகுவாக அள்ளுவதற்குப் பயன்படுத்துவது?

i. துலா ii. சாய்தளம் iii. கோப்பை

52. எந்த நோயை இனங்காண்பதற்கு இரவு வேளைகளில் இரத்த மாதிரி எடுக்கப்பட்டு பரிசோதிக்கப்படுகின்றது?

i. டெங்கு ii. எலிக்காய்ச்சல் iii. யானைக்கால்

53. ஒரு வித்திலைத் தாவரங்கள் யாவை?

i. பனை, மா ii. தென்னை, கமுகு
iii. கமுகு, வேம்பு iv. வேம்பு, கொய்யா

54. 9 909 + 909 + 99 இம் மூன்று எண்களின் கூட்டுத் தொகை

i. 10 907 ii. 10 817 iii. 10 917

கூடையொன்றில் நான்கு வகையான பழங்கள் உள்ளன. அதில் உள்ள மாம்பழங்களின் எண்ணிக்கை 38 ஆகும். மாம்பழத்தை விட 13 தோடம்பழங்கள் கூடுதலாக உள்ளன. தோடம்பழத்தை விட அன்னாசிப்பழங்கள் 8 குறைவாக உள்ளன. வாழைப்பழம் மாம்பழத்தை விட 17 கூடுதலாக உள்ளது.

55. கூடையில் அதிகமாக உள்ள பழவகை எது?


1. வாழைப்பழம் 2. மாம்பழம்
3. தோடம்பழம்

56. மிகவும் குறைவாக உள்ள பழவகை எது?

1. வாழைப்பழம் 2. அன்னாசிப்பழம்
3. மாம்பழம்

57. நான்கு கூடையிலும் உள்ள மொத்தப் பழங்கள் எத்தனை? ..............................................

58. சுற்றளவைக் காண்க?




அந்தி நேரம் ஓய்வு பெற்ற அந்த ஆசிரியர் அங்கிருந்த கட்டொன்றில் அமர்ந்தார். கடலைப் பார்த்தார்.

இதனைத் தொடர்ந்து ஆறு வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களையேனும் கொண்டிருப்பதோடு எழுவாய், பயனிலை முறையாகப் பேணப்பட்டிருத்தல் அவசியம்.

59. ..............................................
60. ..............................................
61. ..............................................
62. ..............................................
63. ..............................................
64. ..............................................

" ஒவ்வொரு வெற்றியாளனும் பல தோல்விகளை சந்தித்த பிறகே உச்சத்தைத் தொட்டிருக்கிறான் என்பதை நினைவில் வைத்திருங்கள். எனவே, நேற்றைய தோல்விகளின் அழுத்தம் உங்கள்மனதில்எப்போதும்நிறைந்திருந்தால் உங்களால் பயனுள்ள எந்தக் காரியத்தையும் செய்ய முடியாது.

ஒரு முட்டாளோ அல்லது தகுதியற்ற ஒருவனோ தோல்வியடைவது வருத்தத்துக்குரிய விஷயமல்ல என்று நான் கருதுகிறேன். ஆனால், அறிவும் திறமையும் கொண்ட ஒருவன் தோல்வியடைந்தால் அதற்காக அவன் வெட்கித் தலைகுனிய வேண்டும். தனது திறமைக்கும் அனுபவத்திற்கும் அவன் துரோகம் இழைத்திருப்பதாகவே கருத வேண்டும். " (டாக்டர் உஜ்வால் பட்னி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணங்களின் வண்ணங்கள்



எம்.ஆர்.எப். ரஹ்மா
தரம்- 8, பாத்திமா மு.ம.ம.வி
புத்தளம்



எ.எல்.எம். பஸ்லின்
தரம்-11
மட்/ வாழைச்சேனை அந்நூர் தே.பா



ஏ.பி.எம். நிப்ரா
தரம்-8, மடபொகுண மாஹிரா மு.வி.
மாஹோ

## பாராட்டைப் பெறும் வண்ணங்கள்



அமீர் பாத்திமா சில்மியா
தரம்-7, அல்ஹாமியா மு.ம.வி
வவுனியா



எம்.என்.எப். அஸ்ரா
தரம்-8, பதுரிய்யா ம.க.
மாவனல்லை



சாபீர் சபானா
வளத்தாப்பிட்டி,
அம்பாறை



எஸ். அஸ்மீர்கான்
தரம்-9,
திருகோணமலை



எம்.கே. முனாஸ்
அந்நஜா அரபுக் கல்லூரி
கந்தளாய்



எஸ்.எச்.எம். அஸ்பாக்
தரம்-7, அல்அமீன் மு.ம.வி,
பொலன்னறுவை



எம்.என். ஆஷிக் பர்ஹாத்,
தரம்-11, பதுரிய்யா ம.க.
மாவனல்லை



ஆர்.எப். சப்னா
தரம்-11, பாத்திமா ஸஹ்றா
பெ.அ.க, ஓட்டமாவடி



ஏ. நஸீஹா, தரம்-11
புலவர்மணி ஷரீபுத்தீன் வித்.
பெரிய நீலாவணை



எம்.ஆர்.எப். அஹானா,
புலவர்மணி ஷரிபுத்தீன் வித்.
பெரிய நீலாவணை



எம்.எப். பஸ்லுல் ரஹ்மான்
தரம் - 7, மடபொண மாஹிரா மு.வி,
மாஹோ



ஏ.ஆர். ஸஆத்
தரம்-9
தி/ அல்பத்தாஹ் மு.ம.வி

அடுத்த சித்திரத்திற்கான தலைப்பு **உழைத்து வாழ்வோம்**


இறுதித் திகதி
20.06.2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# The Trend

Gate way to Alternative Views

## Monthly English Magazine




## Subscriptions Details:

**Local:**
Single Copy: LKR 100
Annual Subscription: LKR 1400
6 Months Subscription: LKR 700

**International:**
India, Pakistan, Maldives, Singapore: LKR 2000.00
Middle East: LKR 2,200.00
England, New Zealand, Australia, Malaysia, Japan, Korea: LKR 2,400.00
United States: LKR 2,700.00

## Contact:

**H.M. Hilal**
(+94 777 849 169)

**S.A.M. Farraj**
(+94 775777177)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org